# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/=   இதழ் - 49   24.12.2023




யாழில் திறன்வளம் கொண்டோரை வல்லுனர்களாக்கும் ஒரு நிறுவனம் 02

ஆரோக்கியத்தின் அடிநாதம் பாரம்பரிய உணவுகளே ஆணிவேர் உற்பத்திகள் 12

நண்பர்கள், உறவினர்கள் பணம் கேட்டால்... சமாளிப்பது எப்படி? 18

# இலங்கையின் சுற்றுலா மறுமலர்ச்சி?!

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



# இலங்கையின் சுற்றுலா மறுமலர்ச்சி?!

**- பி.பார்த்தீபன் -**

இந்த ஆண்டு இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை பதின்மூன்றரை இலட்சத்தை தாண்டியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது ஒரு மிகப்பெரிய வெற்றி என இலங்கை அரசாங்கம் கொண்டாடுகின்றது. கடந்த சில ஆண்டுகளின் பின்னர் இந்தளவுக்கு உல்லாசப் பயணிகள் இலங்கை வந்திருப்பது இதுதான் முதல் முறை!

ஒரு காலத்தில் பாதிக்கப்பட்டிருந்த இலங்கைத் தீவின் சுற்றுலாத் துறையில்



ஒரு நம்பிக்கை ஒளியை இது தந்திருக்கின்றது. உண்மையில் இது ஒரு முழுமையான வளர்ச்சியிலிருந்து வெகு தொலைவில் இருந்தாலும், இந்த மீள் எழுச்சி மேலும் உல்லாசப் பயணிகளை இலங்கைக்கு வருவதற்கு தூண்டுவதாக அமையும்.

இந்த இடத்தில் பல கேள்விகளும் எழுகின்றன. இலங்கையின் சுற்றுலாத் துறை முழுமையாகச் சீர் செய்யப்பட்டுள்ளதா? இதனை முழு அளவில் சீர்செய்ய இன்னும் பல மைல் கற்களைத் தாண்டிச் செல்ல வேண்டும் என்பதே உண்மை. அதற்காக அரசாங்கம் உறுதியுடன் செயற்படுவது அவசியம்! துல்லியமான திட்டமிடலுடன் அர்ப்பணிப்பாகச் செயற்பட்டால், பல சாதனைகளைச் செய்ய முடியும்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையின் சமீபத்திய அதிகரிப்பு இலங்கைக்கு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. இது 2020 இல் பேரழிவுகரமான சரிவைக் கண்டது. உலகளாவிய கோவிட் - 19 பெருந் தொற்று நோய் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை வெறும் 84,000 ஆக சரிந்தன. அதற்கு முன்னைய ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதலும் உல்லாசப் பயணத்துறையில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

இதற்கு மேலாக கடந்த வருடத்தில் இடம்பெற்ற ஆட்சி மாற்றம், பணவீக்கம் மற்றும் அத்தியவசியப் பொருட்களுக்கான பற்றாக்குறை, பொருளாதார நெருக்கடி என்பன உல்லாசப் பயணத்துறையின் விரைவான மீட்சிக்கான நம்பிக்கையை மேலும் குறைத்தது.

இருப்பினும், தற்போதைய உயர்வுக்கு பல காரணிகள் பங்களித்துள்ளன:

பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்துதல் என்பது இதில் முக்கியமானது. உலகளாவிய பயணக் கட்டுப்பாடுகள், குறிப்பாக இந்தியா மற்றும் இங்கிலாந்து போன்ற முக்கியமான நாடுகளிலிருந்து வரும் உல்லாசப் பயணிகளுக்கான கட்டுப்பாடுகள்

தளர்த்தப்பட்டன. அவர்களுக்கு இலங்கை இலகுவாக அணுகக்கூடிய ஓர் இடமாக மாறியுள்ளது.

அரசாங்கக் கொள்கைகளில் ஏற்படுத் தப்பட்ட மாற்றங்களும் பயணிகளின் வருகை அதிகரிப்பதற்கு காரணம். அதில் பிரதானமானது, சுற்றுலா நடத்துபவர் களுக்கான வரிக் குறைப்பு மற்றும் வீசா கட்டணங்களைக் குறைத்தல் உள்ளிட்ட சுற்றுலாவை ஊக்குவிக்கும் நடவடிக்கை களை இலங்கை அரசாங்கம் நடைமுறைப் படுத்தியுள்ளது.

மூலோபாயச் சந்தைப்படுத்தல் பிரச்சா ரங்கள் முன்னெடுக்கப்பட்டமையும் குறிப்பி டத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. இலங் கையின் இயற்கை அழகு, கலாசார செழுமை மற்றும் கட்டுப்படியாகும் தன்மை ஆகியவற்றை முன்னிலைப்படுத்தும் இலக்கு ஆகியவற்றை சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள் சாத்தியமான பார்வையாளர்க ளிடமிருந்து புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்தைப் பெற்றுள்ளன.

சுற்றுலாத் துறையின் பின்னடைவு மற்றும் சவால்கள் இருந்தபோதிலும், பல ஹோட்டல்கள், பயண ஏற்பாட்டாளர்கள் மற்றும் பிற சுற்றுலா வல்லுநர்கள் பார்வை யாளர்களைக் கவரும் வகையில் தொடர்ச் சியான முயற்சிகளை முன்னெடுத்திருந் தார்கள்.

எவ்வாறாயினும், அதிகளவு பயணிகள்



வந்திருக்கின்றார்கள் என்ற தகவல் ஊக்க மளிக்கும் அதே வேளையில், இலங்கை யின் சுற்றுலாத்துறை மறுமலர்ச்சி இன் னும் ஆரம்ப கட்டத்தில் உள்ளது என்பதை அங்கீகரிப்பது மிகவும் முக்கியமானது. இதற்குப் பல சவால்கள் உள்ளன:

பொருளாதார ஸ்திரமின்மை இதில் முக்கியமானது. அதிகரித்து வரும் பண வீக்கம் மற்றும் பற்றாக்குறை ஆகியவை ஒட்டுமொத்த சுற்றுலா அனுபவத்திற்கு ஆபத்தை விளைவிக்கின்றன. அத்தியா வசியப் பொருட்கள் மற்றும் சேவைகள் நியாயமான விலையில் கிடைப்பதை உறுதிசெய்வது நம்பிக்கையை வளர்ப்ப தற்கும், மீண்டும் வருகை தருவதற்கும் முக்கியமானதாகும்.

விமானப் பயணச் செலவுகள் அதிக மாக இருப்பது மற்றொரு சவால். அதிக விமானக் கட்டணம், குறிப்பாக சில சந்தை களில், சாத்தியமான பயணிகளைத் தடுக்க லாம். சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக் கையை அதிகரிக்க விமானப் பயணத்தை



மிகவும் மலிவு விலையில் ஆக்குவதற் கான வழிகளைக் கண்டறிவது முக்கிய மானதாக இருக்கும்.

சுற்றுலா மறுமலர்ச்சி சுற்றுச்சூழல் அல்லது உள்ளூர் சமூகங்களின் இழப்பில் வராமல் இருப்பதை உறுதி செய்வது இன்றியமையாதது. நிலையான நடை முறைகள், பொறுப்பான கழிவு முகாமைத் துவம் மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவை இலங்கையின் அழகைப் பாதுகாப்பதற்கும் நீண்ட கால வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் முக்கியமாகும்.

அதிக மதிப்புள்ள பயணிகள் – அதாவது அதிகளவு பணம் செலவிடக்கூடிய பயணி கள் மீது கவனம் செலுத்துவதும் முக்கிய மானது. சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக் கையை அதிகரிப்பது முக்கியம் என்றாலும், அதிக செலவு செய்து உள்ளூர் பொருளாதா ரத்திற்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங் கும் உயர் மதிப்புள்ள பயணிகளை ஈர்ப்ப தற்கான மாற்றம் நிலையான வளர்ச்சிக்கு முக்கியமானது.

பொதுவாகப் பார்க்கும்போது, இலங்கை யின் சுற்றுலாத் துறையானது பெருந் தொற்றுநோய்க்கு முந்தைய பெருமையை மீட்டெடுக்கும் ஆற்றலைக் கொண்டுள் ளது, ஆனால் கவனமாக திட்டமிடல் மற் றும் நீடித்த முயற்சி இல்லாமல் இது சாத் தியமாகாது. தற்போதைய வேகத்தைப் பயன்படுத்த, பல நடவடிக்கைகளை முன் னெடுக்க முடியும் எனச் சுட்டிக்காட்டப்படு கின்றது. இதில் முக்கியமானவற்றை இங்கு பார்ப்போம்.

பல்வேறு சுற்றுலா சலுகைகள்: பாரம்பரிய கடற்கரை மற்றும் ஆயுர்வேத சிகிச்சை போன்றவற்றுக்கு அப்பால் நகர்வது, சாகச சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா மற்றும் கலாச்சார அனுபவங்கள் போன்ற முக்கிய கவர்ச்சக்குரிய சந்தைகளை உருவாக்கு வது பயணிகளை அதிகளவு ஈர்க்கும்.

போக்குவரத்து வசதிகளை மேம்ப டுத்துதல், தங்குமிட வசதிகளை மேம்ப டுத்துதல் மற்றும் பொது வசதிகளை மேம் படுத்துதல் ஆகியவை உல்லாசப் பயணி களின் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், மிகவும் தேவையான வேலை வாய்ப்புகளையும் உருவாக்கும்.

பயிற்சித் திட்டங்கள் மூலம் உள்ளூர் சமூகங்களை சுற்றுலா மதிப்புச் சங்கிலி யில் ஒருங்கிணைத்து, அவர்களின் கை வினைப்பொருட்கள் மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை மேம்படுத்துதல் மற்றும் நியாயமான வருவாய் பகிர்வை உறுதி செய்தல் ஆகியவை மிகவும் சமமான மற்றும் நிலையான சுற்றுலா சூழலை உருவாக்கும்.

ஒன்லைன் தளங்கள், டிஜிட்டல் மார்க் கெட்டிங் கருவிகள் மற்றும் புதுமையான முன்பதிவு அமைப்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் அணுகலை மேம்படுத்தலாம், அனுபவங்களைத் தனிப் பயனாக்கலாம் மற்றும் புதிய சந்தைகளை அடையாளம் காண்பதும் அவசியம்.

நிலையான மற்றும் வெளிப்படையான வணிகச் சூழலை உருவாக்குதல், ஊழல் தொடர்பான கவலைகளை நிவர்த்தி செய் தல் மற்றும் அதிகாரத்துவ செயல் முறை களை ஒழுங்குபடுத்துதல் ஆகியவை சுற் றுலாத் துறையில் முதலீடு மற்றும் நீண்ட கால வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

முழு அளவிலான சுற்றுலாத்துறை மறுமலர்ச்சியை நோக்கிய இலங்கையின் பயணம் சவால்கள் மற்றும் வாய்ப்புகளு டன் கூடியது. தடைகளைத் தாண்டி, பொறுப்பான நடைமுறைகளைத் தழுவி, அதன் தனித்துவமான பலத்தைப் பயன்ப டுத்துவதன் மூலம், இலங்கைத் தீவு தனது சுற்றுலாத் துறையை மீண்டும் கட்டியெழுப் புவது மட்டுமல்லாமல், அதன் மக்களுக்கு மிகவும் நிலையான எதிர்காலத்தை உருவாக்கவும் முடியும்.

இலங்கையின் பசுமையான மலைகள், மின்னும் கடற்கரைகள் மற்றும் காலத்தால் அழியாத பாரம்பரியம் ஆகியவை மீண்டும் ஒரு புதிய தலைமுறைப் பயணிகளால் விருப்புடன் பார்க்கப்படும். ஒரு சுற்றுலாத் தலமாக தீவின் எதிர்காலம், குறுகிய கால ஆதாயங்களுக்காக மட்டுமல்லாமல், அதன் மக்களின் நீண்டகால செழுமைக் காகவும், அதன் இயற்கை மற்றும் கலாச்சார பொக்கி ஷங்களைப் பாதுகாப்பதற்காகவும் சவாலை எதிர்கொள்ளும் திறனில் தங்கியுள்ளது.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

# அதிகரிக்கும் வரிகள்

வாழ்க்கைச் செலவுடன் அன்றாடம் போராடிக்கொண்டிருக்கும் இலங்கை மக்களுக்கு அரசாங்கத்தின் புதிய வரிகள் மேலதிக சுமையைக் கொடுத்திருக்கின்றன. மேலும் கொடுக்கப்போகின்றன. புதிய வருடத்தை வழமையாக மகிழ்ச்சியுடன் – நம்பிக்கையுடன் வரவேற்கும் மக்கள் இம்முறை அச்சத்துடனேயே எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஜனவரி முதல் நடைமுறைக்கு வரப்போகும் வரிகளால் அத்தியாவசியப் பொருட்கள் உட்பட 100 வரையிலான பொருட்களின் விலைகள் வானுயர அதிகரிக்கப்போகின்றன என்பதுதான் இந்த அச்சத்துக்குக் காரணம்.

பொருளாதார நெருக்கடியால் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவு மக்களின் கொள்வனவுச் சக்தியைப் பெருமளவுக்குக் குறைத்துவிட்டது. ஒரு வேளை உணவைத் தவிர்க்கும் நிர்ப்பந்தத்தில் பல குடும்பங்கள் இருப்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். அத்தியாவசியப் பொருட்களைக்கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு பொருளாதார நெருக்கடி மக்களை நிர்ப்பந்தித்துள்ளது. பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகுவது உட்படப் பல விளைவுகளை நாம் இதன் பலன்களாக இப்போது பார்க்கிறோம்.

நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் தனது வருமானத்தை அதிகரிப்பது அவசியமானதுதான். நெருக்கடியிலிருந்து இலங்கையைப் பிணையெடுக்க வந்திருக்கும் சர்வதேச நாணய நிதியமும் இதனை வலியுறுத்தியிருக்கின்றது என்பது உண்மைதான். அதற்காக உள்ள பல வழிகளில் ஒன்றுதான் வரிகளை அதிகரிப்பது. மேற்கு நாடுகளைப் போல இலங்கை மக்கள் பாரிய வருமானங்களைப் பெறுபவர்களல்ல. இந்த நிலையில், வரிகளை அதிகரிப்பது மக்களின் சுமைகளை அதிகரிப்பதாகவே அமையும்.

வருமான வரி ஏற்கனவே அதிகரிக்கப்பட்டுள்ளது. தொழில்சார் வல்லுனர்கள் பலர் இதனால் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார்கள். மருத்துவமனைகள் உள்ளிட்ட பல துறைகளில் பெரும் நெருக்கடியை இதனால், மக்கள் எதிர்கொள்கின்றார்கள். ஆனால், இந்த நெருக்கடிக்கான தீர்வுகளையிட்டு அரசாங்கத்திடம் எந்த மாற்றுத் திட்டமும் இல்லை. மூளைசாலிகள், மற்றும் இளைஞர்கள் பாரியளவில் நாட்டைவிட்டு வெளியேறுவது நீண்டகால அடிப்படையில் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தக் கூடியது என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனவரி மாதத்திலிருந்து நடைமுறைக்குவரவுள்ள வற் வரி தொடர்பாகவே இப்போது முக்கியமாக ஆராயப்படுகின்றது. இதன் மூலமாக நூறு வரையிலான பொருட்களுக்கு வரி அதிகரிக்கப்படுகின்றது. இதில் பெரும்பாலானவை அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகள். இவற்றுக்கான விலைகள் சுமார் 20 வீதத்தினால் அதிகரிக்கப்படும் என எதிர்வுகூறப்பட்டிருக்கின்றது. எரிபொருள், மின்சாரம் என்பவற்றுக்கான கட்டணங்கள் – விலைகள் அதிகரிக்கும் போது அதன் தாக்கம் மிகப் பெரிதாக இருக்கும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வைக்காண முற்படும்போது ஏற்கனவே பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கின்ற மக்கள் மீது மேலும் சுமையை ஏற்றாமல் மாற்று வழிகள் என்ன உள்ளன என்பதையிட்டு அரசாங்கம் முதலில் சிந்திக்க வேண்டும். அதற்கான சாத்தியங்களை ஆராய வேண்டும். அரசாங்கத்தில் காணப்படும் ஊழல் மோசடிகள் தவிர்க்கப்பட்டாலே பெருமளவு நிதியைச் சேமிக்க முடியும். அதனைவிட, வருமானத்தை அதிகரிப்பதற்கு மேலும் பல திட்டங்கள் உள்ளன.

# அன்புள்ள ஆசிரியருக்கு....





## தொழிலதிபர் எஸ் முத்தையா - சிறந்த நேர்காணல்

குடிசைக் கைத்தொழில் புரிபவராகத் தனது பயணத்தை ஆரம்பித்து, தொழில் அதிபராக பிரகாசிக்கும் திரு எஸ். முத்தையா அவர்களுடைய அறிமுகம் மிகவும் அருமையாக இருந்தது. பலருக்கு சுய தொழில் செய்ய வேண்டும் என்கின்ற சிந்தனையையும் அதனை எப்படி மேம்படுத்தலாம். வருகின்ற சவால்களை எப்படி எதிர்கொள்ளலாம் என்கின்ற எண்ணக் கருவையும் விதைத்திருக்கிறது.

முக்கியமாக, கடினமான சூழல்களில் இருந்து எப்படி மீண்டெழுவது என்பது பற்றி மிகவும் அருமையாக சொல்லி இருக்கிறீர்கள். மலையகத்தின் மிகப் பிரபலமான இவரைப் பற்றி ஆராய்ந்து எழுதிய இக்பால் அலி அவர்களுக்கு நன்றி.

**ஏ.எம்.முனாஸ், ஏறாவூர்**

●●●

## கடிகாரங்கள்

வாராவாரம் கிராமத்தின் கதைகளையும் எங்கள் வாழ்வியலையும் மிக அழகாக சொல்லும் தமிழ் கவி அவர்கள் இந்தத் தடவை கடிகாரத்தை பற்றி எழுதியிருந்தார்.

உண்மையிலேயே அவர் சொல்லி இருப்பது மிகவும் காத்திரமான விடயம் . நமது முன்னோர்கள் இயற்கையையும் ,சூழலையும் வைத்து நேரத்தையும் காலத்தையும் கணித்து வாழ்ந்தார்கள். அவர்கள் கணித்த நேரங்கள் காலங்கள் எல்லாம் அவ்வளவு அச்சொட்டாக எப்போதும் பொருந்தி இருக்கிறது. ஆனால் இன்று நேரங்களை துரத்திக் கொண்டு ஓடிக்கொண்டிருக்கின்ற நாம் கற்கால மனிதர்களை விடச் சந்தோசமாக இல்லை என்பதை ஏற்றுக்கொண்டு தான் ஆக வேண்டும்.

நேரத்தின் அருமை பற்றி அருமையாக சொன்ன தமிழ் கவிக்கு நன்றிகள். இன்னும் பல காத்திரமான கட்டுரைகளையும் தகவல்களையும் சுமந்து வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

**கே. தருமரட்ணம், கிளிநொச்சி**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1900 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 3800 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

Green media House (Pvt) Ltd,
68, crossette lane, Jaffna.

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

-----------------------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ----------------------------------------------------
**முகவரி** - --------------------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - -----------------------------------
**சந்தாக் காலம்** - -------------------------------------------
**செலுத்திய தொகை** - ---------------------------------------
**செலுத்திய திகதி** - ----------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,71,700 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,87,300 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** வற் வரி தொடர்பில் பல தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இந்த வரி சாதாரண மக்களை எவ்வாறு பாதிக்கப் போகின்றது?

**எம்.மதி**
**வல்வெட்டித்துறை.**

**பதில் -** நிச்சயமாக இது சாதாரண மக்களுடைய வாழ்க்கையில் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தத்தான் போகின்றது. சுமார் 100 வரையிலான பொருட்கள் சேவைகளின் விலைகள் இதன் மூலமாக அதிகரிக்கப்போகின்றது.

2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒவ்வொரு குடும்பமும் 20 ஆயிரத்து 467 ரூபாய் வற் வரி செலுத்த வேண்டும் என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாராம் மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவின் மூத்த பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளமை கவனிக்கத்தக்கது. வற் வரி எந்தளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அவர்உணர்த்தியிருக்கின்றார்.

15 வீதமாக இருக்கும் வற்வரியை 18 வீதமாக அதிகரிக்கும் வரி திருத்தச்சட்டம் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

வற் வரி அதிகரிப்பின் மூலம் பொருட்கள், சேவைகளின் விலைகள் பெருமளவில் உயர்வடையும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அத்தியாவசிய பொருட்கள், எரிபொருள், எரிவாயும் உட்பட பல்வேறு மட்டத்தில் இதன் தாக்கம் இருக்கும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அரசாங்கம் எதிர்பார்க்கும் வரி வருமான இலக்கை அடைந்துக் கொள்ள ஒவ்வொரு குடும்பத்திடமும் இருந்து மாதாந்தம் 20 ஆயிரத்து 467 ரூபாயை வரியாக அறவிட வேண்டும் என பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

இதேநேரம், 2024ஆம் ஆண்டு இறுதியில் ஒவ்வொரு குடும்பமும் 2 இலட்சத்து 45 ஆயிரத்து 604 ரூபயை வரியாக செலுத்தியிருக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். வற் வரி அதிகரிப்பின் மூலம் பல இலட்சக்கணக்கான குடும்பங்கள் ஒருவேளை அல்லது இரண்டு வேளை உணவை மாத்திரமே தினமும் எடுத்துக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும்.

வற் வரி அதிகரிப்பு நடுத்தர, ஏழை குடும்பங்களை பெரியளவில் பாதிக்கும் எனவும் பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய நிபந்தனைகளில் இது ஒன்று. அதாவது, அரசாங்கம் வருமானத்தை அதிகரிக்க வேண்டும் என்பது அவர்களது நிபந்தனைகளில் ஒன்று. நிபந்தனையில் தவறில்லை. அதனை நடைமுறைப்படுத்தும் போது, இது எந்தளவுக்கு நாட்டுக்குப் பொருத்தமானது, ஏழைகளையும் நடுத்தர மக்களையும் எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்று ஆராய்திருக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருந்தது. அதனை அரசாங்கம் தவறவிட்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

**கேளுங்கள் தருகின்றோம்**

தமிழர் பொருணமியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 500/= |
| உருளைக்கிழங்கு | - 160/= |
| பச்சைமிளகாய் | - 1400/= |
| தக்காளி | - 650/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 100/= |
| கோவா | - 450/= |
| கரட் | - 450/= |
| பூசணி | - 200/= |
| புடோல் | - 300/= |
| வாழைக்காய் | - 200/= |
| சின்ன வெங்காயம் | - 400/= |
| பெரிய வெங்காயம் | - 450/= |
| பாகற்காய் | - 600/= |
| வெண்டிக்காய் | - 300/= |
| கருணைக்கிழங்கு | - 100/= |
| பயற்றங்காய் | - 500/= |
| லீக்ஸ் | - 300/= |
| கறிமிளகாய் | - 800/= |
| போஞ்சி | - 350/= |
| கீரை - 1 பிடி | - 150/= |
| தேசிக்காய் | - 600/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 214/= |
| கனடா டொலர் - | 239/= |
| சீன யுவான் - | 44/= |
| யுரோ - | 350/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர்டொலர் - | 240/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 406/= |
| சுவிஸ் பிராங் - | 368/= |
| அமெரிக்க டொலர் - | 322/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 225/= |
| கனடா டொலர் - | 249/= |
| சீன யுவான் - | 47/= |
| யுரோ - | 364/= |
| ஜப்பான் யென் - | 2.3/= |
| சிங்கப்பூர் டொலர் | 251/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 421/= |
| சுவிஸ் பிராங் - | 385/= |
| அமெரிக்க டொலர் - | 332/= |



# யாழில் திறன்வளம் கொண்டோரை வல்லுனர்களாக்கும் ஒரு நிறுவனம்



ஜெகன் அருளையா

கோவிட்-19 பெருந்தொற்றின் பேரழிவு கொண்டுவந்த பொதுமுடக்கம் சில காரியங்களுக்கும் காரணமாக அமைந்துவிட்டது. முதல் தடவையாக, மேற்கு மாகாணத்துக்கு வெளியில் தூங்கிக்கொண்டிருந்த நகரங்கள் விழித்தெழ ஆரம்பித்தன. கொழும்பில் பணி புரிந்த பலர் சொந்த ஊர்களுக்குக் குடிபெயர்க்கப்பட்டு அங்கு தமது குடும்பங்களுடன் வீடுகளுக்குள் முடக்கப்படலாயினர். துர்ப்பாக்கியமாகச் சிலர் வேலைகளை இழக்கவேண்டியேற்பட்டதும் உண்மை தான். உடலுழைப்பினால் அவசியமான பணிகளைச் செய்தவர்கள் நகர் முடக்கம் காரணமாகவும், பொதுவான பொருளாதார மந்த நிலை காரணமாகவும் வேலைகளை இழந்தார்கள். ஆனால் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் தொழில்துறை மட்டும் தொலைப்பணி (remote work) வசதிகள் காரணமாகத் தப்பிப் பிழைத்துக் கொண்டது.

விருப்பற்ற ஒன்றாக இருந்தும்கூட தொலைப்பணி முறையானது நடைமுறைக்குகந்த, வினைத்திறனுள்ள, செலவு குறைந்த ஒன்றெனத் தொழில்நுட்ப நிறுவனங்கள் கண்டுகொண்டன. ஒருங்கிணைந்த குழுக்களை உருவாக்குவதன் மூலம் தொலைப்பணிகளை வெற்றிகரமாக இயக்கக் கூடிய நடைமுறைகள் வடிவமைக்கப்பட்டன. பணிமனைகளின் பரப்பளவுகளைச் சுருக்கிக் கொள்ளும் சந்தர்ப்பம் முதன்மை நிர்வாகிகளுக்குக் கிட்டியது. வாடகை, மின்சாரம், துப்புரவுப்பணி, பாதுகாப்பு, பால், சீனி, தேனீர் இத்தியாதிகள் போன்றவற்றில் சேமிப்பைக் காணும் வழிகளைக் கண்டுகொண்டார்கள்.

கொழும்பின் கைக்கடங்கா வாடகை, உப்புக் கரிக்கும் கடை உணவு, பொதுப் போக்குவரத்து ஆகியவற்றைக் கைவிட்டு குறைந்த செலவில் நிறைந்த வாழ்வு பணியாளர்களுக்குப் பயன் தந்தது. கண்டி, கொழும்பு, திருகோணமலை, காலி, யாழ்ப்பாணம், இன்னும் பல இடை நகரங்களில் தொலைப்பணி புரிவதற்காகப் பணியாளர்கள் குறைந்த சம்பளத்தையும் ஏற்றுக்கொண்டார்கள். குறிப்பாக அனுபவமற்ற புதிய தொழில்நுட்பத்துறைப் பட்டதாரிகள் பருத்த சம்பளங்களை எதிர்பார்க்காது கடமையாற்றத் தயாராகினார்கள்.

இப் புதிய வரவுகள் தாம் பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் கற்றுக்கொண்ட தொழில் திறமைகள் மூலம் கொழும்பிலிருந்த தமது சகாக்களுக்கு இணையான திறமைகளைக் காட்டக்கூடியதாகவிருந்தது. ஆனாலும் சீரான ஊடாடல், நேரக் கட்டுப்பாடு ஆகிய தொழில்நேர்த்தி நெறிமுறைகள் போன்ற மென் திறன்களுக்கு (soft skills) அவர்கள் அந்நியமாக இருந்தார்கள்.

மென்திறன்களைக் கற்றுக்கொள்ளக் கூடிய சிறந்த வழி, அவற்றைப் பிறப்பிலிருந்து பின்பற்ற ஆரம்பிப்பதுவே. பாசமும் ஒழுக்கமும் கொண்ட பெற்றோர், அக்கறையுள்ள ஆசிரியர்கள், மரியாதையும் ஆதரவும் தரவல்ல சகபாடிகள் ஆகியோர் மூலமே இவை சாத்தியமாகும். இருப்பினும் இலங்கை சமூகங்களிடையே மென்திறன்கள் இன்னும் போதியளவு வளர்ச்சியடையவில்லை என்பதையும் ஒத்துக்கொள்ள வேண்டும். இயற்கையாகக் கிடைக்காதவற்றை வளர்த்தெடுக்க வேண்டியதும் அவசியம்.

கொழும்பில் காணப்படும் மென்பொருள் தொழில் (software industry) சிறந்ததொரு உதாரணம். நான் 1993 இல் பிரித்தானியாவிலிருந்து வெளிநாட்டுப் பணியாளனாகக் கொழும்பு வந்து ஏழு வருடங்கள் மென்பொருள் உற்பத்தி முகாமையாளராகப் பணியாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. இதன் பின்னர் இத்துறையில் சிறப்பான மாற்றங்கள் நடந்தேறியுள்ளன. வாடிக்கையாளர் முதல் விநியோகஸ்தர் வரை, மேலாளர் முதல் பணியாளர் வரை, மென்திறன் சகல திசைகளிலும் பீறிட்ட வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. 1993 இல் துடைப்பத்துடன் கடந்து போகும் அலுவலக 'பியோன்' கண்டுகொள்ளப்படவே மாட்டார்.

பணியாளர்களுக்குத் தலைகூட அசைக்காமல் நிர்வாகி கடந்து போவார். இப்போது உயர் நிலை அதிகாரிக்கும் கடைநிலை ஊழியருக்குமிடையே சிநேக பூர்வமாக முகமன் கூறுவதும், நன்றி தெரிவிப்பதும் வழக்கமாகிவிட்டது. மேலாளர் தமது பணியாளர்களை மரியாதையுடன் நடத்துகிறார். பணியாளர் தமது மேலாளருடன் பண்புடன் பழகுகின்றனர். கோபத்துடன் வரும் வாடிக்கையாளர்களோடு தற்காப்பு விவாதங்களை மேற்கொள்ளாது சாமர்த்தியமாகப் பேசக் கற்றுக்கொண்டுவிட்டார்கள். மகிழ்வான வாடிக்கையாளர்கள் நல்ல விளம்பரத்தைச் செய்வதுடன் சிபாரிசுகளையும் மேற்கொள்வார்கள். இதனால் வியாபாரம் பெருகுகிறது. "குரங்கை மெது மெதுவாகப் பிடிக்கவேண்டும்" என்றொரு பழமொழி உண்டு. வெற்றிகரமான வியாபாரத்தைப் பிடிப்பதற்கு மென்திறன் ஒரு சிறந்த வழி.

2020 இல் கோவிட் -19 முடக்கங்களின் போது, பிரித்தானியாவிலிருந்து நிர்வகிக்கப்படும் நிறுவனமான 'செபீரோ' (Xebiro) கொழும்பிலிருந்த தமது சில பணியாளர்களைத் தமது சொந்த நகரங்களிலிருந்து பணிபுரிய

(09ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்




## classified advertisement

### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு - 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

தமிழ் ஆக்கள் ஏதோ ஒரு வகையில புண்ணியம் செய்தவை எண்டு எங்கட ஆச்சி நெடுகவும் சொல்லுறவ.

ஏனெண்டால் எங்கட மொழி எங்கட இலக்கியங்கள் எங்கட பண்பாடு எங்கட ஆன்மிகம் எங்கட வரலாறு எல்லாம் மிகப் பழங்காலத்திலை இருந்து இருக்குது.

எங்கட நம்பிக்கைகளுக்குப் பின்னால எங்கட வாழ்க்கை முறையளுக்குப் பின்னால எங்கட சம்பிரதாயங்களுக்குப் பின்னாலை எங்கட பழக்க வழக்கங்களுக்குப் பின்னால நிறைய காரண காரியத் தொடர்புகளும், விஞ்ஞான சமூக உளவியல் தத்துவவியல் காரணங்கள் விளக்கங்கள் எல்லாம் இருக்குது.

ஆனால் கோதாரி விழுவார் எங்கட பலம் ஆக்கள் உதுகளுக்கு ஒரு விளக்கமும் சொல்லாமல் கட்டாயம் பின்பற்ற வேணும் எண்டு சொல்லிப் போட்டுப் போட்டாங்கள்.



# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

உதாலைதான் கண்டதுகள் கிண்டதுகள் எல்லாம் இப்ப எங்கட உந்த விசயங்களைப் பற்றிக் கேள்வி கேக்குதுகள்.

உதுகளுக்கு நாங்கள் கட்டாயம் விளக்கம் சொல்லவேணும். எங்கட பழைய ஆக்கள் விட்ட பிழையளை நாங்கள் விடப்படாது. நாங்கள் செய்யிற எங்கடை ஒவ்வொரு செயலுக்கும் ஏன் செய்யிறம் எதுக்குச் செய்யிறம் எப்பிடிச் செய்யிறம் எண்டு விளக்கம் கட்டாயம் குடுக்க வேணும் கண்டியோ எண்டுவா ஆச்சி.

எங்கட பிள்ளையளுக்கு உதுகளை நாங்கள் சொல்லி வளக்க வேணும் எண்டுவார் அப்பு. நேரம் இல்லை வேலை கூடிப் போச்சுது எண்டு தட்டிக் கழிக்காமல் எங்கட பிள்ளையளோடை கொஞ்ச நேரம் எண்டான்னை குந்தி இருந்து உந்த விசயங்களை விளங்கப்படுத்த வேணும் எண்டுவார்.

ஆனால் ஆச்சி சொன்ன தமிழர்கள் குடுத்து வைச்சவை எண்டதை நான் கொஞ்சம் வித்தியாசமாத்தான் விளங்கினனான்.

வேறை ஒண்டும் இல்லை தமிழர்கள் குடுத்து வைச்ச படியாலைதான் முந்தி சேர, சோழ, பாண்டிய, பல்லவர்கள் காலத்தில் முகநூல் இல்லாமல் போட்டுது.

இருந்திருந்தால் முகநூலிலேயே ஒருத்தரை ஒருத்தர் கேவலமாகத் திட்டித் தீர்த்திருப்பாங்கள். போதாக்குறைக்கு அவங்களுக்கு வால் பிடிக்கிறவங்கள் வாளி வைக்கிறவங்கள் செம்பு தூக்கிறவங் கள் எல்லாம் குரூப் குரூப்பாத் திட்ட வெளிக் கிட்டிருப்பாங்கள்.

பேக் ஐடியிலை வந்து திட்டித் தீத்திருப்பாங்கள். பொம்பிளைப் படத்தை ப்ரொபைலிலை போட்டு வைச்சு மேசெஞ்சறிலை மேசெஜ் அனுப்பி படங்கள் அனுப்பி மயக்கி பேந்து வெருட்டி உருட்டி காசு வாங்கி இருப்பாங்கள் முகநூலிலேயே ஏலுமெண்டால் சண்டைக்கு வா எண்டு சவால் விட்டிருப்பாங்கள். கொமண்டுகளும் செயார்களுமா இணையத்தளமே போர்க்களத்தை விட அமர்க்களமாகக் கதிகலங்கியிருக்கும்.

ஒரே ஒரு நட்டந்தான் வந்திருக்கும் அறம்பாடிய புலவர்கள் வேலை இழந்திருப்பார்கள். இலக்கியங்கள் இலக்கணங்கள் எல்லாந் தோன்றி இருக்காது.

அப்படி யாரும் எழுதி இருந்தாலும் கவிதை கதை எழுதத்தெரியாதவன் எல்லாம் அப்பிடி வந்த இலக்கியங்களிலை இருக்காத பிழைகள் எல்லாம் இருப்பதாக விமர்சனம் செய்திருப்பாங்கள். இல்லாட்டில் எழுதத் தெரியாதவனுக்கு எல்லாம் கூப்பிட்டு விருது குடுத்து முகநூலிலை போட்டிருப்பாங்கள் .

சில கவிஞர்கள் எழுத்தாளர்கள் தங்களுக்கு விரும்பின ஆக்களைப் போட்டு வட்டங்கள் சதுரங்களை உருவாக்கி ஆளாளுக்கு முதுகு சொறிஞ்சிருப்பாங்கள். புலவர்கள் வற்ஸ்அப் குறூப் வைபர் குறூப் தொடங்கி ஒருவரை ஒருவர் அவர்களின் ஊரை உற்றாரை உறவினர்களை நண்பர்களை எல்லாம் கழுவி ஊற்றியிருப்பார்கள். முகநூலில் எழுதியாகிவிட்டதே இனி எதற்கு கல்வெட்டு இனி எதற்கு செப்பேடு என்று அமைதியாகி இருப்பார்கள்.

ஒரு புலவர் எழுதியதை இன்னொரு புலவர் தான் எழுதிய மாதிரி கொப்பி பேஸ்ற் செய்திருப்பார்.

மன்னர் பூஞ்சோலைக் குளத்தில் அந்தப்புரமகளிருடன் ஜலக்கிரீடை செய்வதை ஒளிந்திருந்து படமெடுத்து மன்னர் இப்படிச் செய்யலாமா? என்று பதிவிட்டிருப்பார்கள்.

தற்செயலாக இளவரசிகள் மகாராணிகள் காவலர்களுடன் பேசிக்கொண்டு இருப்பதைப் படம் எடுத்து அரச மகளிர் இப்படிச் செய்யலாமா? எண்டு எழுதி இருப்பாங்கள் வேட்டைக்குப் போவதையும் விடாமல் பின்தொடர்ந்தது படம் எடுத்து மன்னர் மிருகங்களை வதைக்கிறார் என்று பதிவு போட்டிருப்பார்கள்.

மன்னர்கள் போர்க்களக்காட்சிகளை நகருலாக்களை லைவ்வாக போட்டு அந்தப்புர மகளிர்களை ஆசுவாசப்படுத்தியிருப்பார்கள். விரும்பாத அமைச்சர்களை மீம்ஸ் போட்டே வதைத்திருப்பாங்கள். ஏழைப் புலவர்களுக்கு பொற்கிழி கொடுப்பதைப் படம் எடுத்து போட்டிருப்பாங்கள்.

மார்பிங்குக்கும் குறைச்சல் இருந்திருக்காது. வெளிநாட்டு மன்னர்கள் உள்நாட்டு மன்னர்களுக்கு ஒன்றுமே தெரியாது அவர்கள் நாட்டில் சிஸ்டம் சரியில்லை மனித உரிமைகள் இல்லை. ஜனநாயகம் இல்லை. பொருளாதாரத்தை வளக்கத் தெரியாது எண்டு பந்தி பந்தியாக எழுதியிருப்பாங்கள் .

சூமிலும் உள்ளூர் ஒற்றர்களோடு சம்பாசித்துப்போட்டு பேந்து அந்த நாட்டிலை இப்பிடி இப்பிடி எல்லாம் நடக்குது ஆதாரம் இருக்குது எண்டு எழுதி இருப்பாங்கள். உள்ளூர்ச் சனங்களை அப்பிடிச் செய்யுங்கோ இப்பிடிச் செய்யுங்கோ செலவைப் பற்றி யோசியாதையுங்கோ எண்டு சும்மா சும்மா உசுப்பேத்தியிருப்பாங்கள். நல்ல வேளை அவங்கடை காலத்திலை முகநூல் இல்லாமல் போட்டுது.

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

வசதி செய்து கொடுத்தது. அனுபவமுள்ள பணியாளர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதன் மூலம் அங்குள்ள உள்ளூர் திறனாளிகளையும் உள்வாங்கி அங்கேயே ஒரு குழுவை உருவாக்குவதற்கான சந்தர்ப்பத்தை 'செபீரோ' ஏற்படுத்திக்கொண்டது. தொழில் திறமைகளைப் பொறுத்தவரை புதிய வரவுகளிடம் எதுவித பிரச்சினையும் இருக்கவில்லை. கொழும்புக்குச் சமமாக யாழ்ப்பாணமும் இருந்தது.

ஆனாலும் மென்திறன்கள் விடயத்தில் பிரச்சினையாகத் தான் இருந்தது. நேரம் தவறாமை, பயனுள்ள உரையாடல், குறைந்த தலையீடுகளுடன் அதிக கவனம், எதிர்பார்த்த காலத்திற்குள் பணிகளை நிறைவேற்றல், அவசரம் பற்றிய புரியாமை என்பன புதிய வரவுகளுக்குப் புரியாத விடயங்களாக இருந்தன. இதை நிவர்த்தி செய்ய, பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட செபீரோவின் நிர்வாகியான சசீவன் கணேஷநாதன் ஒரு புதிய நிறுவனத்தை உருவாக்கினார். அதுதான் 'நேர்ச்சர்லீப்' (NurtureLeap). தொழில்நுட்பத்தில் திறன் வளம் கொண்ட இளையோரை இனம் கண்டு அவர்களைத் தொழில் வல்லுனர்கள் ஆக்குவதே 'நேர்ச்சர்லீப்பின்' நோக்கம்.

சில விடயங்களை இலகுவாகச் சமாளித்து விடலாம். தினமும் கைரேகை மூலம் கணினிகளிலுட்புகுதல், வெளிவருதல் போன்ற விடயங்கள் மூலமாக மேலாளர் முதல் பயிற்சியாளர் வரை நேரக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தல் என்பது இலகுவாக நடைமுறைப்படுத்தக்கூடிய ஒன்று. ஆனால் திறனுள்ள உரையாடல், அவசரம், அவசியம் பற்றிய புரிந்துணர்வு போன்ற விடயங்களை நடைமுறைப்படுத்துவது கொஞ்சம் கடினமாகவே இருந்தது. தலையை மேலும் கீழும், பக்கவாட்டு என்று அசைப்பது ஆம் அல்லது இல்லை என்பதை உறுதியாகக் கூற முடியாத நிலை. தெருக்களில் விரைவாகப் போகவும் வேலைத்தளங்களில் மெதுவாகப் பணியாற்றவும் கூடிய வித்தைகளை இலங்கையர்கள் நன்றாக அறிந்துவைத்திருக்கிறார்கள். எதற்கு அவசரம் தேவை என்பது அவர்களுக்குப் புரியாத ஒன்று. அவசரமாக வீடேகவேண்டும் என்பதற்காகப் பணிகளை இடைநிறுத்திவிட்டுச் செல்லும் பொதுத்துறை வியாதி தனியார் துறைகளுக்கும் தொற்றிவிட்டது. வாடிக்கையாளரின் தேவைகளை உரிய நேரத்தில் வழங்க முடியாமை என்பது போட்டிகள் மிக்க தனியார் துறைக்கு மிகவும் ஆபத்தான ஒன்று.

'செபீரோ' வில் இணைவதற்கு முன்னர் சஜீவ் எட்வார்ட் 'ஸ்ராக்ஸ்' (STAX) என்னும் பிரபல ஆலோசக நிறுவனத்தில் பணியாற்றியிருந்தார். தற்போது கொழும்பிலுள்ள 'செபீரோ' அலுவலகத்தில் முதன்மை சந்தைப்படுத்தும் அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார். யாழ்ப்பாண அலுவலகத்தை நிர்வகிப்பது அவரது பணி.

"யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் இதர கல்வி நிலையங்களிலிருந்து வரும்



பட்டதாரிகள் தொழில்நுட்பத்தில் சிறப்பானவர்களாகவும் கொழும்பு பணியாளர்களுக்குச் சமமானவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் மொழிப்பிரயோகம், தலைமைத்துவம், திட்டமுகாமைத்துவம், தமிழிலும் ஆங்கிலத்திலும் பேச்சு வல்லமை போன்ற மென்திறன்களில் அவர்கள் சோடை போய் விடுகிறார்கள்.

ஆடை நெறி ஒரு பிரச்சினயே அல்ல. 'ஸ்மார்ட் காசுவல்', 'ஸ்மார்ட் ஷூஸ்' போன்றவற்றில் பிரச்சினைகள் இல்லை. நேரம் தவறாமை, விடுமுறை விண்ணப்பம், மூத்தோரின் கீழ் பணியாற்றல், உரையாடல் திறன் போன்றவை கற்பிக்கப்பட வேண்டியவை. கை ரேகைப் பதிவுகளுடன் தொடர்புள்ள மனிதவள முறைமை (HR) எங்களிடம் உண்டு. வரவை உறுதிசெய்யவும், விடுமுறை விண்ணப்பங்களை நடைமுறைப்படுத்தவும் இது உதவுகிறது. ஒவ்வொருவரும் தமது பணிகள் பற்றிய விளக்கங்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் அளிப்பதன் மூலம் உரையாடற்றிறன், தன்னம்பிக்கை ஆகியவற்றை வளர்த்துக்கொள்ள முடியும்" என்கிறார் சசீவன்.

"நிறுவனத்தின் பணியாளர்களிடையேயான சமூக ஊடாடலை மெருகூட்டுவதற்கென வருடத்திற்கு இரு தடவைகள் கொழும்பு, யாழ்ப்பாணக் குழுக்கள் இணைந்து உலாக்களை மேற்கொள்கின்றன. சென்ற வருடம் வில்பத்திலுள்ள ஆளுனர் வாடியில் இரண்டு நாட் சந்திப்பும், வருட இறுதிக் கொண்டாட்டமாக வாஸ்கடுவவிலுள்ள சிற்றஸ் ஹொட்டேலில் சந்திப்பும் எமது குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது. புதியோர் முதல் மூத்தோர் வரை, நிறுவனப் பணியாளர்கள் மத்தியில் கிடையாகவும் (horizoantal), நெடுவாகவும் (vertical) தோழமையும் விசுவாசமும் உருவாகவேண்டுமென்பதே எமது நோக்கம்" என்கிறார் சசீவன்.

'நேர்ச்சர்லீப் நிறுவனத்தில் மாணவர்கள் பலரும் இணைய வேண்டுமென்பதே சசீவின் விருப்பம். தொழில்நுட்ப ரீதியில் ஏற்கெனவே திறமைகளைக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு மேலும் பயிற்சிகள் தேவையில்லை. அவர்கள் உடனடியாகவே பணிகளை ஆரம்பிக்கலாம். மிகவும் கவனமாக மேற்பார்வை செய்யப்படும் இவர்கள் gzpapilg; gapw;rpfs; (on-the-job-training) மூலம் தமது தொழிநுட்பத் திறன்களையும் மென்திறன்களையும் வளர்த்துக்கொள்ள முடியும்.

கொழும்பு தராதரத்தில் போட்டியிடுமளவுக்கு நேர்ச்சர்லீப் இளையோருக்கு திறன்களைக் கற்பிக்கிறது. பட்டதாரிகளையும், பட்டங்களுக்கு இணையான இதர தொழில் முறைத் தகுதிகளையும் நேர்ச்சர்லீப் அங்கீகரிக்கிறது. உயர் தேசிய டிப்ளோமா (Higher National Diploma (HND)) மற்றும் அதற்கு மேலான தகுதிகளைக் கொண்டவர்கள் பணிக்கு எடுக்கப்படுகிறார்கள். தொழில்நுட்பத் தகுதிகளைக் கொண்டவர்கள் மட்டுமல்லாது சந்தைப்படுத்தல் (Marketing), மனிதவளம் (Human Resources (HR)) போன்றவற்றில் தகுதிகளைக் கொண்டிருப்பவர்களும் உள்வாங்கப்படுகிறார்கள்.

பயிற்சியாளர்களாக (interrns) உள்வாங்கப்படுபவர்களுக்கு சந்தை நியமக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. இப்படியாக உள்வாங்கப்படுபவர்கள் ஆரம்பத்திலிருந்தே முறைப்படியான விடுமுறை விண்ணப்பங்கள், வர்த்தக விடுமுறைகள், நேரம் தவறாமை, ஆடை நெறி (dress code), மருத்துவர் சான்றுடனான நோய் விடுப்பு (sick leave) போன்ற தொழில் நேர்த்தி நடைமுறைகளைப் (professional procedures) பின்பற்றவேண்டும். ஆறு மாதப் பயிற்சிக் காலத்தில் மாதமொரு தடவை அரை நாள் விடுப்பும் வழங்கப்படும்.

பயிற்சிகளை வெற்றிகரமாக முடித்து வெளியேறுபவர்கள் சிலருக்கு செபீரோ குழுமத்தின் நிறுவனங்களில் வேலை வழங்கப்படுகிறது. வேறு சிலருக்கு யாழ்ப்பாணத்திலோ அல்லது கொழும்பிலோ உள்ள இதர நிறுவனங்களில் வேலைகளைப் பெற உதவி வழங்கப்படுகின்றது. நவம்பர் 2023 வரை நேர்ச்சர்லீப் 96 பேர்களை உள்வாங்கியிருக்கிறது. இவர்களில் 35 பேர் தற்போது பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். பயிற்சிகளை முடித்துக்கொண்டவர்களில் 23 பேர் செபீரோவிலும், 22 பேர் இதர நிறுவனங்களிலும் பணிகளை ஆரம்பித்துள்ளனர். 14 பேர் பல்கலைக்கழகங்களில் கல்விகளைத் தொடர்கிறார்கள்.

நேர்ச்சர்லீப் தொழில்துறைகளுக்காக மக்களைப் பதப்படுத்துகிறது. செபீரோ இதற்கான செலவுகளை எடுத்துக்கொள்கிறது. இருப்பினும் இச்சேவையை மேலும் விரிவுபடுத்துவதற்காக தளபாடங்கள், மடிக்கணனிகள் போன்றவற்றைக் கொள்முதல் செய்வதற்காக நிதியுதவிகளை எதிர்பார்க்கிறது.

வாழ்வில் ஒவ்வொரு தெருவும் மேடு பள்ளம் கொண்டதுதான். மென்திறன் களை வளர்த்துக்கொள்வதன் மூலம் மேடு பள்ளங்களைத் தவிர்த்து சுமுகமான உறவுகளைத் தக்கவைத்துக்கொள முடியும். இலங்கை சமூகத்தில் மென்திறன்கள் பரவலாக அறியப்பட்டவையல்ல. நேர்ச்சர்லீப் யாழ்ப்பாணத்தில் பயிற்சிகளை வழங்கி வேலைகளைப் பெற வழிவகுக்கிறது. வடக்கில் வேறு பல நிறுவனங்களும் இப்படியான மென்திறன் பயிற்சிகளை வழங்குகின்றன. இவற்றில் சில சிறப்பான பயிற்சிகளை வழங்குபவையாகவும் இருக்கின்றன.

சஜீவ் எட்வார்ட் உடன் தொடர்புகளை மேற்கொள்ள விரும்புபவர்கள் sajeev@xebiro.com என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளலாம்.

# VAT அதிகரிப்பு:

# பொருளாதாரத்திற்கு வரமா அல்லது சாபமா?




AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

இலங்கையின் பெறுமதி சேர் வரி (VAT) 01 ஜனவரி 2024 முதல் 15%இல் இருந்து 18% ஆக அதிகரிப்பதோடு VAT வரம்பு ரூ. 60 மில்லியனாக குறைக்கப்பட உள்ளது. 138 பொருட்களில் 95 பொருட்களுக்கு விதிக்கப்பட்ட VAT வரி விலக்குகளை நீக்கு வது பணவீக்கத்தை 2.5% அதிகரிப்பதுடன் இதனால் நாட்டில் விலைவாசி பாரியள வில் உயர்வடையவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிறைவேற்று சபை இலங்கைக்கான 48 மாத விரிவாக்கப்பட்ட நிதி வசதி (EFF) ஏற் பாட்டின் முதல் மீளாய்வு மேற்கொள்ளப்பட் டுள்ளது. அதன்படி 2.9 பில்லியன் அமெ ரிக்க டொலர் விரிவாக்கப்பட்ட நிதி வசதி யின் (EFF) கீழ் இரண்டாவது தவணையின் இறுதி தீர்மானம் 12.12.2023 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

IMF கடனின் இரண்டாவது தவணை யான $300 மில்லியனுக்கு ஒப்புதல் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் VATக்கான திருத்தங்கள் அவசரமாக நிறைவேற்றப்பட் டுள்ளன. கடந்த ஆண்டு இலங்கை தனது அந்நிய செலாவணி கையிருப்பில் வரலாறு காணாத வீழ்ச்சியின் பின்னர் மிக மோச மான நிதி நெருக்கடியில் இருந்தமை குறிப் பிடத்தக்கது.

பெறுமதி சேர் வரி (VAT) செலுத்த வேண்டிய வரம்பை ரூ.80 மில்லியனில் இருந்து 60 மில்லியனாக குறைப்பதன் மூலம், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 0.15% வருமான வளர்ச்சியையும் அரச வருவாயில் ரூ.40 ஆயிரம் கோடி வளர்ச்சியையும் அரசு எதிர்பார்க்கின் றது.

மேலும், 2024 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் / பட்ஜெட்டில் (Budget) ஜனவரி 2024 இல் VAT விகிதம் 18% வரை அதிக ரிக்கப்படும் என்றும், சுகாதாரம், கல்வி மற்றும் சில அத்தியாவசிய உணவுகள் தொடர்பான பொருட்கள் தவிர VAT விலக்கு கள் நீக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. இது நிலையான VAT விகிதத்தின் அடிப்ப டையில், இந்தியா மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட பிராந்திய சக நாடுகளுடன் இலங்கையைக் கொண்டு வருகின்றது. பெறுமதி சேர் வரியை (VAT) 15%ல் இருந்து 18% ஆக அதிகரிப்பதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.72% வருமான வளர்ச்சியையும் அரச வருவாயில் ரூ. 227 பில்லியன் வளர்ச்சியையும் அரசு எதிர்பார்க்கின்றது.

நவம்பர் மாதத்தில் பணவீக்கம் 3.4% ஆக இருந்ததால் பணவீக்கம் 2.5% அதி கரிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலை யில், பணவீக்கம் CBSL இலக்கான 5% ஐ விட அதிகமாக இருக்கும்.




### அரச வருமானம் அதிகரிப்பு

அரச வருமானத்தை அதிகரிப்பதற்காகவே இந்த வரி விதிக்கப்பட்டுள்ளது. வரிக் கொள்கைகளை திருத்துவதன் மூலம் தற்போதைய $3.8 பில்லியனில் இருந்து கையிருப்புகளை $5-6 பில்லியனாக உயர்த்துவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், அடுத்த வாரத்திற்குள் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தொகையை அரசாங்கம் பெற்றுக்கொள்ள உள்ளதும் குறிப்பிடத்தக்க சாதக நிலைமையாகும்.

ஜனவரி 01, 2024 முதல் புதிய வரி முன்மொழிவுகள் IMF இலக்குகளுடன் இணைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2023 முதல் ஒன்பது மாதங்களில் அரச வரி வருவாயில் 51% அதிகரிப்பை அளித்துள்ளது. இருப்பினும் 18% VAT அதிகரிப்பு ஒட்டுமொத்த நுகர்வு குறைவதற்கு வழிவகுக்கும் என இலங்கை வர்த்தக சம்மேளனம் கவலை தெரிவித்துள்ளது.

### கையடக்கத் தொலைபேசி குறுஞ்செய்திகளுக்கு VAT வரி

• கையடக்கத் தொலைபேசி குறுஞ்செய்திகளுக்கு மேலதிகமாக நிலையான தொலைபேசிகள் மூலம் அனுப்பப்படும் குறுஞ்செய்திகள் (SMS in fixed telephone networks) VATக்கு உட்பட்டுள்ளன.

பெற்றோல் மற்றும் டீசலுக்கு VAT வரி

• பெற்றோல் மற்றும் டீசலுக்கு பெறுமதி சேர் வரி அறவிடப்படும். இருப்பினும் கச்சா எண்ணெய் வடிவில் கொண்டு வரப்படும் எரிபொருளுக்கு இந்த வரி அறவிடப்பட மாட்டது.

• ஒரு லீட்டர் டீசல் தற்போது 346 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. 18 சதவீதமாக VAT வரி விதிக்கப்பட்டதன் பின் ஒரு லீட்டர் டீசலின் விலை ஜனவரி முதல் 63 ரூபாவால் அதிகரிக்கப்படும்.

### சுற்றுலாத் தொடர்பான சேவைகள்

• உள்வரும் சுற்றுப்பயணங்கள் தொடர்பான சேவைகள் மற்றும் உள்நாட்டில் இயங்கும் ஹோட்டல்கள் உள்நாட்டில் கிடைக்கும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், எந்தவொரு விளையாட்டு வீரருக்கும் ஹோட்டல் தங்குமிடம் மற்றும் ஏதேனும் ஒரு விளையாட்டு நிகழ்வு அமைப்பாளர் அல்லது விளையாட்டுடன் தொடர்புடைய செயல்பாடுகளிற்கு புதிதாக அமுல்படுத்தப்படும் VATற்கு உள்வாங்கப்படும்.

• இது ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் வழங்கும் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை அதிகரிக்க செய்து இறுதியில் வியாபாரத்தில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தும்.

VAT வரி திருத்தச் சட்டத்தில் விலக்கு அளிக்கப்பட்ட பொருட்கள், சேவைகள்

VAT விலக்குகளில் மருந்துகள், ஊனமுற்றோருக்கான உபகரணங்கள் (சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல், மற்றும் காது கேட்கும் கருவிகள்), அரிசி மாவு, கோதுமை மா, பாண், காய்கறிகள், பழங்கள், திரவப் பால், குழந்தைப் பால் மா மற்றும் "சுவாசரிய" (Suwasariya) ஆம்புலன்ஸ் சேவை ஆகியவை அடங்கும்.

• மருத்துவமனை அறைக் கட்டணம் தவிர மருத்துவமனை பராமரிப்பு சேவைகள், இரசாயன உரங்கள் தவிர மற்ற உரங்கள் மற்றும் கைத்தறி ஆடைகளும் VAT வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

• மேலும், சுற்றுலாப் போக்குவரத்து வாகனங்கள் தவிர, பொதுப் போக்குவரத்து சேவைகள் மற்றும் நிதிச் சேவைகள் ஆகியவற்றுக்கும் VAT வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

• மின்சாரம் மற்றும் மின்சார விநியோகம், கச்சா எண்ணெய், மண்ணெண்ணெய், அழகுசாதனப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், ஆகியவற்றுக்கு VAT வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைகளிற்கு நிபந்தனைக்கு அமைவாக VAT வரி.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைகளில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் பெறுமதி சேர் வரிக்கு (VAT) உட்படுத்தப்படும். கடற்றொழில் துறை ஏற்கனவே சீர்குலைந்துள்ளது. 18 வீத பெறுமதி சேர் வரியை (VAT) நடைமுறைப்படுத்துவது மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேலும் சிக்கலாக்கும்.

அலைபேசி இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் VAT விதிப்பினால் மேலும் பாதிப்பு

சட்டவிரோதமான முறையில் பெரும் எண்ணிக்கையிலான அலைபேசிகள் நாட்டுக்குள் கொண்டு வரப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் சட்ட ரீதியாக நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் அலைபேசி நிறுவனங்கள் பாதிப்புக்களை எதிர்நோக்குவதாக கூறப்படுகின்றது.

மேலும் சட்டவிரோதமான வழிகளில் அலைபேசிகள் கொண்டு வரப்படுவதனால் நாட்டுக்கு பாரியளவில் வரி வருமான இழப்பு ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்படும் அலைபேசிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என கூறப்பட்ட போதிலும் இதுவரையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெறுமதிசேர் வரி 18 வீதமாக உயர்த்தப்பட்டுள்ள நிலையில் சட்டரீதியாக அலைபேசி இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் மேலும் பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிடும். சட்ட ரீதியாக நாட்டுக்குள் கொண்டு வரப்படும் அலைபேசிகள் மூலம் வருடாந்தம் 52 மில்லியன் டொலர் வரி வருமானம் கிடைக்கப்பெறுவதாகவும், சட்டத்திற்கு புறம்பாக கொண்டு வரப்படும் அலைபேசிகளினால் நாட்டுக்கு 96 மில்லியன் டொலர் நட்டம் ஏற்படுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

சமையல் எரிவாயு, குடிநீர் மற்றும் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கும்.

(21ஆம் பக்கம் பார்க்க)

# ஆரோக்கியத்தின் அடிநாதம் பாரம்பரிய உணவுகளே ஆணிவேர் உற்பத்திகள்



இலங்கையின் கிழக்கே மீன் பாடும் தேனாடாம் மட்டக்களப்பு மாவட்டத்தில், சமூக நலத்திட்டங்களை கருத்தில் கொண்டு இயற்கை உணவகத்தை ஆரம்பித்திருக்கும் இரண்டு நம்பிக்கை மணிகளைச் சந்தித்தோம்.

மண்ணுக்கே உரித்தான தனித் தன்மைகளோடு சமூகத்தில் பலருக்கும் முன்மாதிரியாக திகழும் இருவரும் வெவ்வேறு துறைகளில் பிரகாசித்துக் கொண்டிருந்தாலும், அவர்களுடைய ஒன்றுபட்ட முயற்சியால் இன்று ஆணிவேர் என்கின்ற அற்புதமான சிறுதானிய உணவகங்களும், உற்பத்தி பொருட்கள் நிலையம் ஒன்றும் உருவாகி இருக்கின்றன.

யாரிலும் தங்கி இருக்காத தனித்தன்மையை நிலை நாட்டுவதற்கான தொழிலோடு, தங்கள் கனவுப்பயணத்தையும் ஆரம்பித்திருக்கும் திருமதி .சுஜிக்கா ஜனகன் மற்றும் திருமதி விஜயபரணி ஜெயசுதன் அவர்களை தமிழர் பொருணமியம் நேர்கண்டது.

குடும்பத்தின் மீதான பற்றும் சமூகத்தின் மீதான அக்கறையும் என இரண்டு தளங்களையும் சமமாக நடத்தி வரும் ஆணிவேர் நிறுவனத்தின் ஆணி வேர்களை உங்களுடைய நிறுவனத்தை பற்றி சொல்லுங்கள் என்று வினாவிய போது?

கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாக உணவு உற்பத்திகளில் ஈடுபட்டிருக்கின்றோம். ஆனால் இந்த வருடம் 2023 மாசி மாதத்தில் இருந்தே உத்தியோகபூர்வமாக பதிவுகளை மேற்கொண்டு தொழிலை விரிவுபடுத்த ஆரம்பித்தோம்.

மிகுந்த சிரத்தையோடும் கவனத்தோடும் நடைமுறைப்படுத்தப்படும் எமது ஆணிவேர் நிறுவனத்தின் உற்பத்திகளுக்கு நமது சமூகத்திலும் வெளி மாவட்டங்களிலும் மிகுந்த வரவேற்பு கிடைக்கிறது.

ஆணிவேர் உற்பத்தி நிலையத்தில் 15க்கும் மேற்பட்ட உற்பத்தி பொருட்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

உற்பத்திகளோடு மாத்திரம் நின்று விடாமல் ஒரு சிறுதானிய உணவகத்தை நடத்த வேண்டும் என்கின்ற எங்களது




எண்ணத்திற்கு ஏற்ப, நாங்கள் மிகக் குறைந்த செலவில் ஓர் உணவகத்தை ஆரம்பித்தோம்.

முழுக்க முழுக்க இயற்கை உணவுகளை அங்கே வழங்கினோம். ஆணிவேர் குழுமத்தை நம்பி வருகின்ற வாடிக்கையாளர்களுக்கும் சரி, முதல் முதலாக நமது உணவகத்திற்கு வருகின்ற அவர்களுக்கும் சரி திருப்தி தரக்கூடிய வகையில் எமது உணவுகள் அமைந்திருக்கின்றன.

பிளாஸ்டிக் பாவனை பொருட்களையோ அல்லது சூழலுக்கு தீங்கு விளைவிக்க கூடிய பைகளையோ எங்களது உணவகத்தில் நாங்கள் பயன்படுத்துவது இல்லை என்பதை ஒரு குறிக்கோளாகவே வைத்திருக்கிறோம்.

வாழையிலை தாமரை இலை போன்று இலைகளிலும் மட்பாண்டங்களிலும் உணவுகளைப் பார்சல் செய்வது பலரை எங்களுடைய பக்கம் கவனிக்க வைத்திருக்கிறது.

மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆணிவேர் உற்பத்திகள் என்று கவனித்து வாங்கப் படக்கூடிய அளவிற்கு எமது உணவுகளும், உற்பத்தி பொருட்களும் பெயர் பெற்றிருப்பது மகிழ்ச்சியை தருகிறது. எமது வாடிக்கையாளர்களின் நிறைவான சொற்கள் இன்னும் இன்னும் இன்னும் எங்களை



**நேர்கண்டவர் - ஞா.கவினி**

உற்சாகப்படுத்துகின்றன என்று நெகிழ்கின்றனர்.

இந்த குறுகிய காலத்தில் சமூகத்தில் கவனிப்பு பெற்றிருக்கும் நீங்கள் ஆரம்ப

காலங்களில் எதிர்கொண்ட சவால்களைப் பற்றி சொல்லுங்கள்? என்றதும் எதிரில் புன்னகையோடு பதிலளிக்கிறார் சுஜிக்கா..

தொழிலை ஆரம்பித்த காலத்தில் இருந்து சவால்கள் வந்து கொண்டே தான் இருந்தன .

இப்போதும் நாங்கள் சவால்களை சந்தித்து கொண்டு தான் இருக்கிறோம், ஆனால் சவால் ஒவ்வொன்றும் தான் நாங்கள் மேலும் வளர வேண்டும் என்ற உத்வேகத்தை எங்களுக்கு தருகின்றது.

ஆரம்ப காலத்திலிருந்து சிறுதானி யங்களை கொள்வனவை செய்வதில் நாங்கள் பாரிய சவால்களை எதிர்கொள் கிறோம் .

எங்களுடைய பிரதேசத்தில் சிறுதானி யங்கள் கிடைப்பது அரிதாகவே இருக்கி றது, ஆகவே முற்பகுதிகளில் நாங்கள் இந்தியாவிலிருந்து சிறுதானியங்களை கொள்வனவு செய்தோம்.

ஆனால் அப்படிக் கொள்வனவு செய்த போது செலவு விகிதம் அதிகரித்துக் கொண்டே சென்றது .

தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள சிறு தானியங்கள் மற்றும் உள்ளூர் உற் பத்தி பொருட்கள் விற்பனையாளர்களான பல்லுயிர் அங்காடி சகோதரர்களிடம் இருந்து சிறு தானியங்களை பெற்றுக் கொள்கிறோம்.

இயற்கை முறையில் விளைவிக்கப் பட்ட இந்த தானியங்களை எங்கள் உணவு களுக்கு பயன்படுத்துவதன் மூலம் பாரம பரிய சுவையையும் ஆரோக்கியத்தையும் மக்களுக்கு வழங்கக்கூடியவாறு இருக் கின்றது.

தற்போது எமது பிரதேச மக்களின் கோரிக்கைக்கு இணங்கமேலும் ஓர் உணவகத்தை நிறுவியிருக்கிறோம், அதனால் தற்போது அதிகமான சிறுதானி யங்களின் தேவை இருக்கிறது.







ஆனால் அவற்றைப் பெற்றுக்கொள் வது தற்போது எங்களுக்கு சவாலான விடயம் தான்.

உடனடி உணவுகள் தவிர தற்போது நாங்கள் உலர் உணவுகளையும் தயார் படுத்தி வருகின்றோம். ஆகவே காலப் போக்கில் இயற்கை முறையில் தானியங் களை விளைவிக்கும் பலரை கண்டு பிடிக்க வேண்டிய ஒரு தேவை இருக்கி றது.

ஆரம்ப காலத்தில், உணவினை தயா ரிப்பது, உலர் உணவுகளை உற்பத்தி செய்வது கடைகளுக்கு அவற்றை எடுத்துச் செல்வது, உணவகத்தில் நேரத்தை செல வழிப்பது என்று சகல வேலைகளையும் நாங்கள் இருவரும் தான் செய்து கொண்டி ருந்தோம். இக்கட்டான காலங்களில் எங்க ளுடைய குடும்பத்தினர் எமக்கு பெரிதும் உதவியாக இருந்தனர்.

காலப்போக்கில் எங்கள் வியாபாரம் சூடு பிடிக்க தொடங்கியபோது,நாங்கள் பணியாளர்களை வேலைக்கு அமர்த்தி னோம், தற்போது எங்களிடம் பெண்கள் தலைமைதாங்கும் குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் வேலை செய்கிறார்கள். பகுதி நேரமாகவும் முழு நேரமாகவும் என்று தங்களது இயலுமைக்கு ஏற்ப எங்களோடு சேர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் எங்க ளுடைய பணியாளர்களும் எங்களுடைய வெற்றிக்கு காரணிகளாக இருக்கிறார்கள் என்று பெருமிதமாக கூறுகின்றனர்.

இன்று மட்டக்களப்பில் இரண்டு கிளைக ளைக் கொண்டு வியாபித்து நிற்கின்ற உங்களுடைய ஆணிவேர் உற்பத்தி நிறு வனம் மற்றும் உணவகங்களை இன்னும் விஸ்தரிக்கும் நோக்கம் உள்ளதா ? உங் கள் கனவுகள் பற்றி எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள் என்று கேட்டபோது, கனவு விரிந்த கண்களோடு பதிலளிக்கின்றனர்

மட்டக்களப்பில் மாத்திரமன்றி பல் வேறு பிரதேசங்களிலும் சிறுதானிய உற்பத்தி பொருட்களையும் சிறுதானியங் களால் ஆன உணவு வகைகளையும் அறிமுகப்படுத்த வேண்டும் என்பது எங்க ளுடைய கனவு...

நாங்கள் ஆரம்பிக்கின்ற ஒவ்வொரு கிளையிலும் பலருக்கு தொழில் வாய்ப் பையும் அப்பிரதேச மக்களுக்கான ஆரோக்கியத்தையும் சிறப்பாக வழங்க வேண்டும் என்று நினைக்கிறோம். அத்தோடு அருகி வருகின்ற சிறுதானி யங்கள் பற்றிய அறிமுகத்தை எமது இளம் சந்ததிக்கு நாங்கள் கடத்த வேண்டிய முக்கியமான நேரத்தில் இருக்கிறோம்.

இன்றைய காலகட்டத்தில் சிறுவர்களும் சரி பெரியோர்களும் சரி ,துரித உணவுக ளுக்கு அடிமைப்பட்டு போய் கிடக்கிறோம்.

அதனால் தான் பெயர் தெரியாத நோய் கள் எல்லாம் எமது கிராமத்துக்குள் ஊடு ருவி எமது வாழ்க்கையை அழித்துப் போடு கின்ற நிலைவரத்தை ஏற்படுத்தியிருக்கின் றது.

அன்று நம்முடைய முன்னோர்கள் சிறந்த உணவு கலாச்சாரத்தை பின்பற்றி இருந்தார்கள், இயற்கையின் கொடைக ளான சிறுதானியங்கள் மூலிகைகள் கிழங் குகள் என்று ஒரு சிறந்த மருத்துவ கூடத் தையே தமது குடும்பத்திற்குள் வைத்தி ருந்திருக்கிறார்கள். அதனை நமக்கும் கடத்தி இருக்கிறார்கள்.

ஆனால் நாங்கள் உணவே மருந்து என்ற எமது பாரம்பரிய கலாச்சாரத்தில் இருந்து மாறி நாகரிகம் என்ற மோகத்தில் மூழ்கி ,எமது அடுத்த சந்ததிக்கு நஞ்சை உணவாகக் கொடுக்கும் மிகப்பெரிய ஆபத்தான செயலை செய்துகொண்டி ருக்கின்றோம். எனினும் தற்போது மக்கள் கொஞ்சம்ளி விழிப்படைந்து இருக்கின் றனர்.

அதிகமானவர்கள் எமது உணவகத்தை நாடி வருவதை பார்க்கும்பொழுது எங்க ளுக்கு மிகவும் சந்தோசமாக இருக்கின் றது. எது எப்படி இருப்பினும்ம எமது மக் கள் தமது பாரம்பரிய உணவுப் பழக்க வழக்கத்தைத் தமது பிள்ளைகளுக்கும் அடுத்த சந்ததியினருக்கும் கடத்திச் செல்ல வேண்டும் என்பதே எமது அவா .

உண்மையில் நாங்கள் இருவரும் வெவ்வேறு துறைகளில் பணியாற்றிக் கொண்டிருந்தாலும், உணவு பற்றி சிந்தித் தபோது ஏதாவது புதியதாகவும் ஆரோக் கியமானதாகவும் எமது குழந்தைகளும் பெரியவர்களும் விரும்பக்கூடிய வகையி லும் செய்ய வேண்டும் என்று தீர்மானித் தோம். அந்த உணவினை எமது குடும்பத்தி னருக்கு மாத்திரம் அல்லாது எமது சமூகத் தில் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்கின்ற பேரவா தான் இன்று ஆணிவேர் உணவு கூடம் ஆகவும் உற்பத்தி நிலைய மாகவும் உருவெடுத்து இருக்கிறது என்று பேசும் இவர்களது தன்னம்பிக்கை லேசாக எங்களையும் தொற்றிக்கொண்டது.



# அடைமழை

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

“ஆடுமாடில்லாதவன் அடைமழைக்கு ராசா, பெண்டில் பிள்ளை இல்லாதவன் பஞ்சத்துக்கு ராசா” இது ஒரு கிராமத்து பழமொழி. அதன் காலம் இதுதான். பஞ்சமும் அடைமழையும் சேர்ந்தே மக்களை வருத்திக் கொண்டிருக்கிறது..

கூலி வேலைக்கு செல்வோர் தமது முழு திறமையையும் காட்டி கடுமையாக உழைத்து தமது வருவாயை நிர்ணயம் செய்ய வேண்டியதாகிறது. பின்னே கூலியாட்களை வைத்து வேலை செய்விப்பவர்களும் தமது வருவாயை எதுவிதத்திலும் பெருக்க வழி தெரியாமல் இருக்கிற குறைந்த வளத்தில் மிக முக்கியமான வேலைகளுக்கு மட்டுமே ஆட்களை வேலைக்கு எடுக்கிறார்கள்.

ஆடு மாடு வளர்ப்போர் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர் அவர்களது கால் நடைகளுக்கான மேய்ச்சற்றரவைகள் அனைத்தும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளன. மாரிகாலம். மாடுகளை அவிழ்த்து விடுவதற்கு தடை.

காரணம் வேளாண்மை பயிராகிவிட்டது. தொலைவுக்கு மாடுகளை விரட்டி விடும் காலமானாலும் கூட மாடுகள் தமது பட்டிக்கு திரும்பி வருவதோ அங்கு இரவில் தங்குவதோ அவற்றுக்கு மிக மோசமான தண்டனையாகவே இருக்கும்.

எனவே அவைகள் திட்டியாக உள்ள தெருக்களில் படுத்து உறங்குவதையே விரும்பும். மாடுகளை விவசாயக் காலங்களில் காலைகளில் அடைத்து பராமரிக்கும் தொழிலை செய்பவர்களிடம் மாடுகளின் சொந்தக்காரர்கள் விடுகிறார்கள் அவர்களும் கிராமத்தின் ஒதுக்குப்புறங்களில் மாடுகளை இரவில் அடைக்கும் காலைகளை கதிகால்களும் முட்கம்பியும் கொண்டு அடைத்து, அதற்குள் மாடுகளை சாய்த்து மூடுகிறார்கள்.

இந்த காலைகளுக்கு மேற்கூரை கிடையவே கிடையாது. பெய்யும் மழைநீரும் வார்ந்தோடிவரும் நீரும் இந்தப்பட்டியில் நிறையும் இரவு முழுதும் மாடுகளின் உடலை நுளம்புகள் குத்த அவை கால் மாறிகால்மாறி உழக்கி கூடவே சாணமும் மூத்திரமும் அதிலேயே விட்டு ஒருவகை கூழ் உருவாகியிருக்கும். மாடுகளின் முழங்கால்வரை இது ஆழமாக இருக்கும். இந்த மாடுகள் காலையில் காலைக்கு சொந்தமானவர்கள் வந்து திறக்கும் வரை அந்தக்கூழிலேயே நிற்கும். சில மாடுகளின் கண்களில் கண்ணீர் சொரியும் இந்த கொடுமையை நேரில் பார்த்தவர்கள் ஏராளம்.

அதுமட்டுமல்லாமல இயலாதநிலையில் கால் சோர்ந்து இந்தக்கூழின் மீதே படுத்து விடும் மாடுகளும் உண்டு. வன்னியில் இந்தக்காலங்களில் மாடுகளின் சொந்த நிறமே சேறாகத்தானிருக்கும்.

மனித வரலாற்றில் இந்த விலங்குகளுக்கு மனிதர்கள் இழைக்கும் கொடுமைகள் எல்லா நாடுகளிலும் மிக அதிகம். தொழிற்புரட்சி ஏற்பட்டு யந்திரங்களின்



இப்போது அடைமழை என முன்னோர்களால் கூறப்படும் தாளமுக்கம் அடிக்கடி வரும் காலம். பாருங்கள் எங்கள் முன்னோர்களின் காலக்கணிப்பு அப்படி இருந்தது. அமாவாசை பருவம் அட்டமி நவமி என்று மழைக்கான கால அட்டவணையை வைத்திருப்பார்கள். இப்போதும் ஏறக்குறைய அதையொட்டியதாகத்தான் மாரியும் கோடையும் வந்தாலும். நாம் அதை எல்நிநோ நானினோ என்று புதிய பெயர்களால் சுட்டத் தொடங்கிவிட்டோம்.

ஆதிக்கம் மெள்ள வளரும் போதே பால் முட்டை இறைச்சி போன்ற தேவைகளுக்காக வளர்க்கப்படும் பிராணிகளும் இயந்திரங்களாகவே நடத்தப்பட தொடங்கின. அவை கருவுறுவதற்கு தமது ஆண் இனத்தை நாட முடியாதபடிக்கு தடை செய்யப்பட்டது. காளையை கண்ணால் பார்க்காமலே பசு கருவுற்றது. அது கன்று போட்ட பின்னர் பாலைக்கறக்கும் விவசாயி கன்றுக்கான செயற்கை உணவுகளை கொடுத்து மாட்டுக்காக ஒரு போலி கன்றை உருவாக்கி விடுகிறான்.

மாடுகளை கொண்டு சென்று மேய்க்க முடியாதவர்கள் இரண்டு மாடுகளை ஒன்றாகப் பிணைத்து விடுவார்கள் இவை மாதக்கணக்கில் அப்படியே விடப்படும் ஒன்றையொன்று கயிற்றை முறுக்கிக் கொண்டு அந்தரத்தில் படுத்துழலும். இன்னுமொரு வகை முன்னங்கால் ஒன்றையும் கழுத்தின் கயிற்றையும் குறுக்கி கட்டிவிட்டு அவிழ்த்து விடுவர் அது தலையை நிமிரவே முடியாது தன் முழங்காலுக்கு மேல் தலையை தூக்க முடியாமல் பகல் முழுதும்மேயும் அப்படியே படுக்கும். இப்படியான சித்திர வதைகளை சாதாரண நாட்டு மாடுகள் அனுபவிக்க, மேற்கத்தைய பண்ணைகளில் கன்றுகளை இறைச்சிக்காக தயார் செய்ய அது அந்தப்பக்கம் இந்தப்பக்கம் திரும்ப முடியாத சிறு கூடுகளில் அடைத்து வைப்பதாக படித்தேன். அவை போதிய எடையை அடையும்வரை படுக்கக் கூட முடியாதநிலையில் இருக்கும்.

பன்றிப் பண்ணைகளிலும் இதேநிலை தான். குட்டிகளை ஈன்றதும் அவை நாலு வாரங்களில் பிரித்தெடுக்கப்பட்டு அவற்றை பருமனாக்கும் முயற்சியில் ஈடுபடுத்தப் படுகிறது. இந்தியாவில் கோவில் யானைகளின் பராமரிப்புப்பற்றி அதன் பாகன் ஒருவர் பேட்டி கொடுத்தபோது தாம் ஆறு மாதங்களானதும் குட்டிகளைப் பிரித்து விட்டு அவற்றை தனியே வளர்ப்போம் அப்போதுதான் தாய் யானையை மறுபடி கருவுறச் செய்ய முடியும் என்றார்.

இதே நிலையில்தான் நாம் பெருமளவான கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களிலும். ஏடை குறைந்து பொரித்த குஞ்சுகளை வரிசையிலிருந்து தட்டிவிட்டு அவை உயிருடன் அரைக்கப்பட்டு வளர்ப்புப் பிராணிகளுக்கான உணவாக மாற்றப்படுகிறது. நாற்பத்தைந்து நாட்களில் ஒரு கோழியை முழுதாக வளரச் செய்து உணவாக கொள்ளும் முறையை அறிகிறோம்.

இதே சமயம் நாட்டுக்கோழிகளுக்கும் இப்போது சுதந்திரம்கொடுக்க முடியவில்லை என்கிறார் ஒருவர். கோழிகளில் முட்டையிடும் கோழிகளுக்கு அங்குமிங்கும் ஓடித்திரியவும், தேவையான இலை குழை புல் போன்றவற்றுடன் பச்சிவகைகளையும் உண்ணவும் சேவலின் அழைப்பை ஏற்று அதனுடன் குலாவிக் கருவுறவும் அனுமதி அழித்தாக வேண்டும். அப்படி அது சுதந்திரமாக திரிந்து இட்டால்தான் அது நாட்டு முட்டை. இன்றைய நாட்டுக் கோழிகளுக்கும் மேய்ச்சற்றரவைகள் இல்லை. பெரும் பாலும் நெல் தவிடு என கவனித்து கொடுக்கும் உணவுகள்தான் இதனால் அவை இடுகின்ற முட்டைகளின் தரமும் அளவும் குறையத்தான் செய்கிறது.

எமது மண்ணில் ஆடுகள் முற்றாக அழிந்து விடுமோ என்ற அச்சம் எனக்கிருக்கிறது. காரணம் எமது வேலிகளில் சின்ன சந்துக்களூடாகவும் நுழைந்து கன்றுகாலிகளை கடித்து மேயும் அயல்வீட்டு ஆடுகள் இப்போது இல்லை. ஒன்றிரண்டு அல்ல நான்கு வீடுகளில் ஆடு வளர்த்தார்கள். இப்போது அயலவர்களின் நச்சரிப்பு தாங்காமலும் விற்று விட்டார்கள். ஆட்டின் உணவை சுத்தமாக பேணாமல் அது கண்டதையும் தின்று செத்துப் போனதும் காரணம். ஆடு வளர்ப்பது என்பது தனிக்கலை. மாடுகளைப் போல அவற்றை நனைய விட முடியாது. பனிக்காலம் வந்து விட்டாலோ காலையில் பனி வற்றும் வரை மேய விடமுடியாது. புனிப்புல் மேய்ந்தால் வாயில் புழுப்பிடித்து விடும். இப்படியாக சாதாரணமாக நாலைந்து ஆடு வளர்த்தவர்கள் சோர்ந்து போனார்கள். ஆடுகளுக்கு நிச்சயம் கொட்டில் போடவேண்டும். குழை வெட்டிக்கட்ட நல்ல தகுதியான ஆட்பலம் வேண்டும் அவ்வளவுதான் தொகையாக ஆடுவளர்க்கும் ஒரு சிலரிடம் மட்டுமே ஆடுகள் இருக்கின்றன.

இப்போது அடைமழை என முன்னோர்களால் கூறப்படும் தாளமுக்கம் அடிக்கடி வரும்காலம். பாருங்கள் எங்கள் முன்னோர்களின் காலக்கணிப்பு அப்படி இருந்தது. அமாவாசை பருவம் அட்டமி நவமி என்று மழைக்கான கால அட்டவணையை வைத்திருப்பார்கள். இப்போதும் ஏறக்குறைய அதையொட்டியதாகத்தான் மாரியும் கோடையும் வந்தாலும். நாம் அதை எல்நிநோ நானினோ என்று புதிய பெயர்களால் சுட்டத் தொடங்கிவிட்டோம்.

மிக மோசமான பொருளாதார கஸ்டம் மார்கழி தை என் இரண்டு மாதங்களில் தான் எனக்கு நன்கு நினைவிருக்கிறது. மரக்கறித் தோட்டங்களில் நீர் அதிகரிப்பால் அவை வேரழுகி இறக்கும் மேட்டில் நிற்பவையும் பூக்காது. வீட்டிலுள்ள நெல் வயலில் விதைத்தது போக மீதமிருந்தாலும் அவித்து குத்த முடியாது. பெரும்பாலும் நகைகள் அடைவுக்குப் போய்விடும். வயலுக்கு மருந்தடிக்க, பசளை போட இன்னு மின்னும் சிலபல காரியங்களுக்காக அவை அடமானம் போகும் குளத்து வெள்ளத்தில் துள்ளிவரும் பனையேறியும் கச்சலும் மட்டுமே மனம் நிறைந்த கறி. வயல்கடந்து குளத்து வானில் காளான் முளைக்கும் அதுவும் கறிதான் ஏனைய பொழுதுகளில் அடுத்த வேளை என்ன என்பதே பெரிய கேள்வியாகவிருக்கும் பணத்தை காண்பது அருமை. எமது சொந்த வளங்கள் மட்டுமே எம்மை காப்பாற்றும் அடை மழை தைமாதம் வரை தொடரும்.



ஆனந்தன்
பிரேம்நாந்
லக்சி பண்ணை

# காட்டு யானைகளின் ஊடுருவலை கட்டுப்படுத்தும் உயிர்வேலி விவசாய முறை

காட்டு யானைகளை கட்டுபடுத்த நம் முன்னோர்கள் சப்பாத்தி கள்ளி, பனை மரம் தேசிமரம் மற்றும் தேனீக்களை (உயிர் வேலி) யாக பயன்படுத்தி, விலங்குகள் ஊடுருவலைக் கட்டுப்படுத்தினார்கள்.

தற்போது எல்லை கிராமங்களில், யானை வேலிகள் அமைத்து இருந்தாலும் முறையான பராமரிப்பு இல்லாமல், சூரிய மின்கலங்கள் திருடப்படுவதாலும் காட்டு யானைகள் மின் வேலிகளின் தன்மையை அறிந்து இருப்பதாலும் காட்டு யானைகள், பன்றிகள், பயிர்களை பெருமளவு சேதப்படுத்தி வருகின்றன.

குறிப்பாக, யானைக் கூட்டம் வயல்களில் புகுந்தால், பல மாதங்கள் பாடுபட்டு வளர்த்த பயிர்கள் போன்றவை ஒரே இரவுக்குள் அழித்துவிடும்.

எனவே பயிர் செய்கை இடங்களை சுற்றி வரிசையாக நீண்டு வளரும் கள்ளிச் செடி, பனைமரம், தேசி மரம், மற்றும் சில தாவரங்கள், தேனீ வளர்ப்பின் மூலமும் உயிர் வேலி அமைக்கலாம். தோட்டத்தைச் சுற்றி ஊசி போன்ற கூர்மையான முட்களையும். பனைமரத்தின் கத்தி போன்ற கருக்கையும், தேனீக்களின் ரீங்கார சத்தத்தினையும் கேட்டும். சுவர்போல காட்சியளிக்கும் இந்த இயற்கையான உயிர்வேலியைக் கடந்து யானை உள்ளிட்ட எந்த உயிரினமும் பயந்து நுழைவதில்லை.

பழந்தமிழர்கள் தங்களது விளைநிலங்களைச் சுற்றி உயிர்வேலிகளை அமைத்தே பல்லாண்டுகளாய் விவசாயம் செய்து வந்துள்ளனர். என்பதை யாராலும் மறுக்க இயலாது.

## சப்பாத்திக்கள்ளி வேலி அமையும் முறை



கள்ளி மாத்திரமன்றி நீண்டு வளரக் கூடிய. அதிக முட்கள் நிறைந்த ஏனைய கள்ளிச் செடிகளையும் உயிர் வேலியாக பயன்படுத்தலாம்.

இந்த சப்பாத்தி கள்ளியானது குறைந்த நீர் கட்டமைப்பை எடுத்துக் கொள்ளும் பயிர் என்பதனால்விவசாயிகள் தங்களுடைய மேட்டுக்காணிகளுக்கு மட்டுமே உயிர் வேலியாகச் சப்பாத்திக்கள்ளியை பயன்படுத்த முடியும்.

மாறாக தாழ்வான நிலங்களில் நடுகை செய்தால் ஈரலிப்பு அதிகமாகி முற்றாக அழுகிவிடும். நடுகை செய்யும் போது எங்களுடைய முள்வேலி கம்பிக்கு வெளியில் இரண்டடி தள்ளி நேராக இரண்டு அடிக்கு ஒரு செடி வீதம் நடுகை செய்ய வேண்டும். காலப்போக்கில் இடைவெளிகள் இல்லாமல் நேராக அடர்த்தியாகி வளரும். அத்தோடு சப்பாத்தி கள்ளி செடிகளில் உள்ள முட்கள் சிறிது விஷத்தன்மை வாய்ந்தவை ஆகும்.

ஆகையால் நாங்கள் அதன் அருகில் செல்லும் போதும் கவனமாக இருக்க வேண்டும்.

மாறாக அதில் உள்ள முட்கள் எமக்கு குத்துமாக இருந்தால். குத்திய இடத்தில் சிறிய கட்டி போன்று ஒன்று வளர ஆரம்பிக்கும்.

சப்பாத்திக்கள்ளி நாட்டிய நாளிலிருந்து முதல் ஒரிரு வருடங்கள் வரை கவனமாக அதாவது மூன்று அடி வளரும் வரை பார்க்க வேண்டும்.

மூன்றடிக்கு மேல் வளர்ந்தால் மட்டுமே யானைகள் இவ்வேலியினை கடந்து செல்வதை நிறுத்தும்.

### பனைமர வேலி அமைக்கும் முறை



பனை விதைகளை எமது தோட்டங்களில் எல்லைப்புறத்தில் நேராக ஒவ்வொரு விதைகளாக நடுகை செய்யக் கூடாது, மாறாக முக்கோண வடிவில் நேராக நடுகை செய்ய வேண்டும்.

அதாவது விதைகளை முக்கோண வடிவில் நடுகை செய்யும் போது முக்கோணத்தில் உள்ள மூன்று விதைகளுக்கு இடைப்பட்ட தூரம் 7 அடி கட்டாயம் இருக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் காட்டு விலங்குகள் எமது தோட்டத்தினுள் நுழைவதற்கு சிரமமாக இருக்கும் காரணம் பனை மரத்தின் கருக்கு மட்டைகள் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தவையாக இருக்கும்.

இந்த உயிர் வேலியை நான்கு வருடங்கள் வரை சற்று கவனமாக பராமரிக்க வேண்டும். காரணம் நான்கு வருடங்களுக்கு பிறகுதான் இவ் வேளியினை யானைகள் கடந்து செல்வதை நிறுத்தும். பனை மரங்களைக் கொண்டு உயிர்வேலி அமைப்பதனால் எதிர்காலத்தில் பனை மரத்திலிருந்து நாம் பதநீர், கருப்பட்டி, கள்ளு, நுங்கு போன்றவற்றை உற்பத்தி செய்வத னால் மேலதிகமாக இரட்டிப்பு வருமானத் தினை கொடுக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

### தேசி மரங்களினால் உயிர்வேலி அமைக்கும் முறை



தேசி மரங்களைக் கொண்டு உயிர் வேலி அமைப்பதனால் எமக்கு மேலதிக மாகவும் ஒரு வருமானத்தினை தேசி மரங்களினால் பெறக்கூடியதாக இருக்கும்.

அது சிறிய வருமானமாக இருக்காது மிகப் பெரும் வருமானமாக இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

காரணம் இப்போது சந்தையில் ஒரு கிலோ தேசிக்காயின் விலை 1000/= ரூபா வாக உள்ளது. எமது தோட்டத்தின் எல்லைப்புறத்தில் தேசி கன்றுகளை நடுகை செய்யும் போது,முள்வேலிக்கு உள்ளே நான்கு அல்லது ஐந்து அடி உட்புறமாக நேர் வரிசையிலோ அல்லது முக்கோண வடிவிலோ நடுகை செய்யலாம்.

நீர் வரிசையில் நடுகை செய்வதாக இருந்தால் ஏழு அல்லது எட்டு அடி இடைவெளியில் நடுகை செய்யலாம். முக்கோண வடிவில் நடுகை செய்வதாக இருந்தால் மூன்று கன்றுகளுக்கு இடைப்பட்ட தூரம் ஒன்பது அல்லது பத்து அடி இடைவெளி இருக்குமாறு பார்த்து நடுகை செய்ய வேண்டும்.

தேசி மரங்களினால் அமைக்கப்பட்ட உயிர் வேலியினை நான்கு வருடங்கள் வரை நாம் பராமரிக்க வேண்டும். அதாவது தேசி மரம் நான்கு அடி வளர்ந்த பிறகு தான் யானைகள் இவ்வேலியினை கடந்து செல்வதை நிறுத்தும்.

### தேனீக்களை கொண்டு உயிர்வேலி அமைக்கும் முறை

எமது தோட்டங்களின் எல்லைப் புறத்தில் தேனிப்பட்டிகளை அமைத்து ,நேராக 50 அடி இடைவெளியில் நிறுவ வேண்டும்.

அதன் பிறகு ஒவ்வொரு தேனீ பெட்டிகளை சுற்றி 10 அடி விட்டத்தில் பூச்செடிகளை நடுகை செய்ய வேண்டும். குறிப்பாக



சாமந்திப்பூ செடிகளை நடுகை செய்வது சிறந்ததாக இருக்கும்.

இவ்வாறு செய்தால் தான் தேனீக்களில் நடமாட்டம் அவ்விடத்தில் அதிகமாகி, அங்கு வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் தேனீக்கள் தங்களுக்குரிய கூடுகளை அமைக்கும்.

மாறாக அவ்விடத்தில் பூச்செடிகளை நடுகை செய்யாத பட்சத்தில் அவ்விடத்திற்கு தேனீக்கள் வராது.

அதோடு பெட்டிகள் வைத்தும் பிரயோசனம் இல்லாமல் போய்விடும்.

தேனீக்களின் நடமாட்டம் அவ்விடத்தில் அதிகமான பின்பு. நேராக அமைக்கப்பட்ட ஒவ்வொரு தேன் பெட்டிகளையும் ஒன்றோடு ஒன்று இணைக்கும் வண்ணம் மெல்லிய உலோக கம்பிகளை கொண்டு கட்டி விட வேண்டும்.

இவ்வாறும் செய்தால் மட்டுமே உயிர் வேலியின் பூரண பலனை எம்மால் அனுபவிக்க முடியும். அதாவது இரவு நேரங்களில் ஒவ்வொரு பெட்டிகளோடு இணைத்து கட்டப்பட்ட உலோக கம்பிகள் சிறிது அசையும் பட்சத்தில் அனைத்து தேனீக்களில் ரிங்கார சத்தம் பெரிதாக இருக்கும். அதோடு காலப்போக்கில் சுத்தமான ஆரோக்கியமான தேனை உற்பத்தி செய்து விற்பனை செய்யலாம்.

இது எமக்கு மேலதிக வருமானத் தினை கொடுக்கும்.

### ஒலிபெருக்கி மூலம் யானைகளை கட்டுப்படுத்தும் முறை



அதிகமாக இம்முறையினை வெளி நாடுகளில் கையாளுகின்றார்கள் .

அதாவது எமது தோட்டங்களில் சிறிய ஒலிபெருக்கி பெட்டிகளை நான்கு அல்லது ஆறு இடங்களில் பொருத்தி ,

இவற்றை இயக்கும் இயந்திர ஒலி பெருக்கியினை பண்ணை இல்லங்களில் வைத்து ,இதன் ஊடாக சிங்கத்தின் கர்ச்சனை மற்றும் தேனீக்களின் ரீங்கார சத்தத்தினை இரண்டு அல்லது மூன்று மணி நேர பதிவாக இயக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் எமது தோட்டங்களில் உள்ள எல்லைப்புறத்தில் சிங்கத்தின் கர்ஜனை மற்றும் தேனீக்களின் ரிங்கார சத்தம் பெரும் சத்தமாக இரவு நேரங்களில் ஒலிபெருக்கியில் ஒலிக்கும் போது , அத்திசையனை நோக்கி யானைகள் மற்றும் காட்டு பன்றிகள் மற்றும் மாடு, ஆடு போன்ற விலங்குகள் கூட அவ்விடத்தை நோக்கி வராது.

ஆனால் இப்போதுள்ள அதிகமான பண்ணையாளர்கள் மேற்கூறிய முறைகளை பின்பற்றுவதைக் கடினமாக கருதி மின்சார வேலிகளில் மட்டுமே அதிக கவனத்தினை காட்டுகின்றார்கள். ஏதோ ஒரு வழியில் மின்சார வேலிகள் ஆபத்தினை ஏற்படுத்தும் என்பதனை நாங்கள் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

இங்கு முடியாதது என்று எதுவும் இல்லை "முயன்றால் எதையும் சாதிக்கலாம்"

# நண்பர்கள், உறவினர்கள் பணம் கேட்டால்... சமாளிப்பது எப்படி?



- பி.வி.சுப்பிரமணியம் -

நம்மில் பெரும்பாலானோருக்கு பொதுவான பிரச்சினை, நம் நண்பர்களையும் உறவினர்களையும் பொருளாதார ரீதியாக எப்படி எதிர்கொள்வது என்பதுதான். பலரும் நம்மிடம் பணம் கேட்டு வருவதும், பல சமயங்களில் நாம் என்ன முடிவு எடுப்பது என்று தெரியாமல் தவிப்பதும் அடிக்கடி நடக்கும் நிகழ்வுகள்தான்.

இது மாதிரியான சூழலில் ஏற்படும் சங்கட மான நிலையைத் தவிர்க்க வாரன் பஃபெட் இரண்டு விதமான ஸ்கோர் கார்டுகள் பற்றிப் பேசுவார். அதில் ஒன்று, இன்டர்னல் ஸ்கோர் கார்ட் (Internal Score Card) இன்னொன்று, எக்ஸ்டர்னல் ஸ்கோர் கார்ட் (External Score Card). இவை இரண்டில் ஒருவர் தன் இன்டர்னல் ஸ்கோர் கார்ட்டுக்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டும் அப்படித் தரும்போது வெளிப்புற விஷயங்கள் பெரிய அளவில் நம்மை பாதிக்காது என்கிறார் பஃபெட்.

பொதுவாகவே, நம்மில் இரு வகை மனிதர்கள் இருக்கிறார்கள். ஒரு தரப்பினர், தங்களின் இன்டர்னல் ஸ்கோர் கார்டில் கவனம் செலுத்துபவர்கள் இன்னொரு தரப்பினர், எக்ஸ்டர்னல் ஸ்கோர் கார்டில் கவனம் செலுத்துபவர்கள். பணம் சம்பாதிப்பதிலும், அதைப் பயன்படுத்துவதிலும் இரு தரப்பும் இரு வேறு விதமான அணுகுமுறையைக் கொண்டிருப்பார்கள்.

பெரும்பாலானவர்கள் தங்களின் வாழ்க்கை தான் சிறந்தது என்பதை அடுத்தவர்களுக்குக் காட்டவும், பிறர் பார்த்து வியக்க வேண்டும் என்பதற்காகவும் பெரிய பங்களா, பெரிய கார் போன்ற சொத்துகளை வாங்குவதில் ஆர்வம் காட்டுவார்கள். ஆனால், இன்டர்னல் ஸ்கோர் கார்டில் கவனம் செலுத்துபவர்கள் மற்றவர்களுக்குத் தன் பந்தாவைக் காட்டுவதற்காகச் சொத்துகளை வாங்க மாட்டார்கள். அதாவது, கண்ணுக்குத் தெரியாத சொத்துகளான பங்குகள், காப்புறுதி, நிலையான சேமிப்புக்கள் போன்றவற்றில் முதலீடு செய்திருப்பார்கள்.

நீங்கள் ரூ.2 கோடிக்கு காப்புறுதி எடுத்திருக்கிறீர்கள் எனில், அதை வீட்டில் ஃப்ரேம் செய்து மாட்டப்போவதில்லை. அது பற்றி உங்கள் மனைவியைத் தவிர்த்து பெரிதாக யாரிடமும் நீங்கள் சொல்ல மாட்டீர்கள். அதே போல, பங்குகளிலும் சில கோடிகள் நீங்கள் வைத்திருந்தால்கூட அது யாருக்கும் பெரிதாகத் தெரிய வாய்ப்பில்லை.

இது போன்ற சொத்துகள் அதிகபட்சம் நீங்கள் வருமான வரித் தாக்கல் செய்யும் ஓடிட்டருக்குத் தெரியலாம். அல்லது, நிதி ஆலோசகர் அல்லது உங்களுக்கு பொலிசியை விற்ற நபருக்குத் தெரியலாம்.

பல கோடிகள் மதிப்புக்கு இது போன்ற சொத்துகளில் நீங்கள் வைத்திருந்தாலும், நீங்கள் பெரிய பங்களா, கார் உள்ளிட்டவை இருக்கும் வசதியான வாழ்க்கையை வாழாமல் ஒரு நடுத்தரமான வாழ்க்கை முறையை வாழ்ந்தால் உங்களிடம் எந்தச் சொத்துகளும் இல்லை என்றே எல்லோரும் நினைப்பார்கள்.

நீங்கள் எப்போதோ வாங்கிய வீட்டில் வசித்து வருபவராக இருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம், அந்த வீடு இப்போது கோடிக்கணக்கான மதிப்பில்கூட இருக்கலாம். ஆனால், நீங்கள் எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து வந்தால் உங்களிடம் யாரும் வந்து பண உதவி கேட்க நினைக்க மாட்டார்கள்.

ஆனால், நீங்கள் பெரிய பங்களா போன்ற வீடு, அடிக்கடி புதிய கார்கள் வாங்குவது, அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சுற்றுலா செல்வது என நீங்கள் ஒரு பகட்டான வாழ்க்கையை வாழ்கிறீர்கள் எனில், உங்களிடம் அதிகமான பணம் கொட்டிக் கிடக்கிறது என்றே பலரும் நினைப்பார்கள்.

அப்படி நினைக்கும்போது அவர்கள் உங்களிடம் பணம் கேட்கத் தயங்க மாட்டார்கள். ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் உங்களிடம் பண உதவி கேட்டுவந்து நிற்பார்கள். உங்கள் வீட்டில் வேலை பார்ப்பவர்களில் ஆரம்பித்து, உங்களுடைய நண்பர்கள், உறவினர்கள் என அனைவரும் பணம் கேட்கும் சந்தர்ப்பத்தை உருவாக்கிக்கொள்வார்கள்.

அவர்கள் கேட்கிற தொகை ஆயிரமோ, லட்சமோ என்பது முக்கியம் அல்ல. உங்கள் கௌரவத்துக்காக நீங்கள் அவர்களுக்குப் பணம் தரத் தொடங்கினால் அவர்கள் அடிக்கடி அதை ஒரு பழக்கமாக்கிக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. மேலும் சிறு, சிறு தொகைகளை வாங்கி சரியாகத் திருப்பித் தருவார்கள். அதே நம்பிக்கையில் பெரிய தொகையை நீங்கள் தந்தால், அதைத் திருப்பித் தராமல் போக நிறையவே வாய்ப்புண்டு.

நீங்கள் பணம் தர மறுத்தால், அவர்கள் உங்களை நிச்சயமாகத் திட்டவே செய்வார்கள். உங்களைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் பேச ஆரம்பிப்பார்கள். உங்களைப் பொது இடங்களில் மரியாதைக் குறைவாகக்கூட பேசுவார்கள்.

பொதுவாக, தேவை என்பதற்காக மட்டும் பலரும் பணம் கேட்பதில்லை. மாறாக, ‘உங்களிடம் நிறைய பணம் இருக்கிறது, அதை நீங்கள் தருவது உங்கள் கடமை’ என்ற எண்ணத்துடனேயே பணம் கேட்பார்கள். சிலர், அவர்களுக்குச் சேர வேண்டியதையும் நீங்கள் அபகரித்துக்கொண்டு விட்டீர்கள். எனவே, கேட்கும்போது எல்லாம் பணம் தர வேண்டும் என நினைப்பார்கள்.

எப்படிக் கேட்டால் நீங்கள் பணம் தருவீர்கள் என்பதெல்லாம் மற்றவர்களுக்குத் தெரியும். நீங்கள் மறுக்கவே முடியாதபடிக்குக்கூட அவர்கள் திட்டமிட்டுப் பேசுவார்கள்.

ஆனால், பணம் கேட்பவர்கள் சொல்லும் காரணங்களை அப்படியே நம்பிவிடாமல், அவர்கள் சொல்வது எந்த அளவுக்கு உண்மை, உண்மையிலேயே அவர்கள் நெருக்கடியில் இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அடுத்து, அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி எப்படிப்பட்டது என்பதைப் பாருங்கள். பலர் தங்களின் தவறான பழக்கவழக்கங்கள், தவறான நிதி நிர்வாகம் காரணமாகவும் நெருக்கடியில் சிக்கி இருக்கலாம்.

உதாரணமாக, உங்கள் நண்பர் அவரிடம் இருந்த எல்லா பணத்தையும் நஷ்டம் அடைந்திருக்கிறார் என வைத்துக் கொள்வோம். அவருக்கு இருக்கிற கடன்களை அவரால் அடைக்க முடியாமல் தெரிந்தவர்களிடம் எல்லாம் பணம் கேட்கிறார் எனில், அவர் எந்தளவுக்கு நீங்கள் தரும் பணத்தை வைத்து பிரச்சினையிலிருந்து வெளியே வருவார் என்று பாருங்கள். முக்கியமாக, நீங்கள் கொடுத்த பணம் திரும்பவரும் என்பதற்கான சாத்தியக்கூறுகள் எந்தளவுக்கு இருக்கின்றன என்று பாருங்கள். அவருக்கு உள்ள நெருக்கடியிலிருந்து வெளிவர அவரிடம் உள்ள திட்டம் என்ன என்பதைப் பாருங்கள்.

ஆனால், தவறான நிதி நிர்வாகம் தொடர்பான பழக்கவழக்கங்களைக் கொண்டவர்கள் ஒரு நாளும் அவற்றில் இருந்து வெளியே வரமாட்டார்கள். பிரச்சினையைச் சமாளிக்க நீங்கள் பணம் தந்தால் அதை வைத்து புதிய பிரச்சினையை உருவாக்கிக் கொள்வார்கள்.

இப்படி எல்லாம் சொல்வதால், நாம் யாருக்கும் உதவியே செய்யக் கூடாது என்று நினைக்காதீர்கள். மனிதர்கள் ஒருவருக்கொருவர் அவசியமான நேரங்களில் உதவி செய்துகொள்ள வேண்டும். அதுதான் மனிதத் தன்மையும்கூட.

உதாரணமாக, என் நண்பர் ஒருவர் எதிர்பாராதவிதமாக ரூ.70,000 கடன் அட்டை கடனில் சிக்கிக்கொண்டார். அதற்கு அநியாயமாக 35% வட்டி கட்ட வேண்டிய நிலை. அந்தத் தொகையை முழுமையாகக் கட்டும் அளவுக்கு அவரிடம் நிதி ஆதாரம் இல்லை. அவர் தேவை இல்லாத செலவுகளைச் செய்யாதவர். புகைப் பழக்கம், குடிப் பழக்கம் அவருக்கு இல்லை. அவருடைய பழக்க வழக்கங்கள், நிதி நிர்வாகம் பற்றி எனக்கு நன்றாகத் தெரிந்ததால், அவர் கடனை அடைக்கப் பணம் தந்தேன். அதை அவர் எனக்கு சரியாகத் திருப்பித் தந்துவிட்டார். இது போன்ற சரியான நபர்களுக்கு, நீங்கள் செய்யும் உதவி அவர்களுடைய பிரச்சினையில் இருந்து காப்பாற்றும். தவிர, நீங்கள் தரும் பணத்தை சரியாகத் திரும்ப தந்துவிடுவார் என உறுதியாகத் தெரிந்தால், நிச்சயம் அவருக்குப் பணம் தரலாம்.




என் இன்னொரு நண்பர் இதே போல என்னிடம் பணம் கேட்டார். ஆனால், அவர் கேட்ட தொகை அதிகமாக இருந்தது. அந்தத் தொகையை அவர் திருப்பித் தருவார் என என்னால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. அதனால் அவரிடம், “உங்கள் பிள்ளைகளின் கல்விக் கட்டணத்தை நான் செலுத்துகிறேன். காப்புறுதிக் கட்டணத்தைச் செலுத்துகிறேன். என்னால் முடிந்தது இவ்வளவுதான்” என்று சொல்லி விட்டேன். அதையும் அந்தந்தக் கட்டணங்கள் அதற்குரிய நபர்களிடம் சரியாகச் சென்று சேரும் வகையில் காசோலையாகத்தான் கொடுத்தேன். ரொக்கப் பணமாகக் கொடுத்தால், அவர்கள் எதற்காகப் பயன்படுத்துகிறார்கள் என்று நமக்குத் தெரியாது!

ஒரு குடும்பத்தில் வருமானம் ஈட்டுபவர் யாராக இருந்தாலும் ஒருவர் மற்றவருக்குத் தெரியாமல் பணத்தைத் தருவது கூடாது. உங்கள் நண்பர் பணம் கேட்கிறார் எனில், அதை உங்கள் மனைவியிடம் கேட்கச் சொல்லுங்கள். ஏமாற்றும் எண்ணம் கொண்டவர்கள் இன்னொருவரிடம் பேசத் தயங்குவார்கள். அவர்களிடம் சிக்காமல் இருக்க இதுவே சிறந்த வழி.

எனவே, பணவிஷயத்தில் நாம் நம் நண்பர்களிடமும் உறவினர்களிடமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது எந்தளவுக்கு அவசியமோ, அதே அளவுக்கு நம் வாழ்க்கை முறையையும் விவேகத்துடன் அமைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் இது மாதிரியான சங்கடங்களில் இருந்து தப்பிக்க முடியும்!

**பொதுவாக, தேவை என்பதற்காக மட்டும் பலரும் பணம் கேட்பதில்லை. மாறாக, ‘உங்களிடம் நிறைய பணம் இருக்கிறது, அதை நீங்கள் தருவது உங்கள் கடமை’ என்ற எண்ணத்துடனேயே பணம் கேட்பார்கள். சிலர், அவர்களுக்குச் சேர வேண்டியதையும் நீங்கள் அபகரித்துக் கொண்டுவிட்டீர்கள்... எனவே, கேட்கும்போது எல்லாம் பணம் தர வேண்டும் என நினைப்பார்கள்.**

# விலங்குகளைக் கொல்லும் வீதி விபத்துக்கள்



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்



மனிதனின் முன்னேற்றப் பாதையில் வீதி வசதிகள் மிக இன்றியமையாதவை. முன்னைய காலத்தில் பல நாட்கள் எடுக்கும் பயணங்கள் இன்று ஒரு சில மணித்துளிகளில் முடிவடைகின்றன. இதற்கு மனிதனின் போக்குவரத்து சாதனங்களையும் அவற்றின் முன்னேற்றத்தையும் அவை செல்லும் பாதைகளையும் காரணமாக கூறலாம். சாதாரண சாலைகள் இன்று அதிவேக நெடுஞ்சாலைகளாக மாறி மனிதனின் பயண நேரத்தைக் குறைத்துள்ளன. கிராமங்கள் நகரங்களுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளன. அந்த மக்களின் தேவைகள் இலகுவாக நிறைவேறுகின்றன. இலங்கையை பொறுத்தவரை மிக அண்மைக் காலத்தில் பல பாரிய நெடுஞ்சாலைத் திட்டங்கள் நிறைவேறியுள்ளன. இந்தியாவுக்கு கூட நெடுஞ்சாலை அமைக்கப்படவுள்ளது. இது எமது மக்களின் தேவைகளை இலகுவாக்கும் ஒரு செயற்பாடு என்பதற்கு மாற்றுக் கருத்து கிடையாது. எனினும் இந்த முன்னேற்றத்தில் மறைந்து காணப்படும் ஒரு துர்ப் பக்கத்தை, மனிதனால் வஞ்சிக்கப்படும் ஒரு கூட்டத்தின் அவலக்கதையை இந்தக் கட்டுரையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆம். அபிவிருத்தியின் அடையாளமாகவும், மனிதனின் நேரத்தை மிச்சப்படுத்தும் கருவியாகவும் கருதப்படும் வீதிகளில் விபத்துக்குள்ளாகும் விலங்குகள், மற்றும் பறவைகளின் கொடுங்கனவை இந்தக் கட்டுரை கூற விழைகிறது.

இலங்கையின் வடக்கு மக்களின் பிரதான பாதையான ஏ9 வீதி மிகவும் பரபரப்பானது. பல வாகனங்கள் நாள் முழுவதும் பயணிக்கின்றன. அந்த பரபரப்பான வீதியில் தினமும் பயணிக்கும்போது ஒரு முறை உற்றுப் பாருங்கள். அந்த வீதியில் எத்தனை காட்டு விலங்குகள், பறவைகள், ஊர்வன, வளர்ப்பு பிராணிகள் என அடிபட்டு இறந்து கிடக்கின்றன என்று. சிறிய ஓணான், முதல் பாம்புகள் காட்டுப்பூனைகள், வளர்ப்பு நாய்கள், பூனைகள், மர நாய்கள், அணில்கள், ஆடு மாடுகள் என வகைதொகை இன்றி வீதியில் அடிபட்டு அப்புறப்படுத்தபடாது வாகனங்களால் மீள மீள சிதைக்கப்பட்டு சக்கையாக சாறாக மாறி இருப்பதை காண முடியும். சில வேளைகளில் நாட்கணக்கில் அப்புறப் படுத்தப்படாமல் அதே இடத்தில கிடந்து அழுகி துர் மணத்தைத் தரும் கொடுமையும் நிகழ்கிறது. இது குறித்த A9 வீதியில் மட்டும் நிகழ்வதில்லை. ஓர் எடுத்துக் காட்டாகவே அதனை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இலங்கையின் சிறிய குச்சொழுங்கை முதல் பாரிய நெடுஞ்சாலைகள் வரை இதுதான் நிலைமை.

மனித நாகரீகத்தின் வளர்ச்சிப் பாதையில் வாகனங்களின் பவனை தவிர்க்க முடியாதது. இலங்கை மக்களும் அதற்கு விதி விலக்கானவர்கள் கிடையாது. இலங்கையிலும் வாகனப் பாவனை மிக அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளது. அதனுடன் சமாந்தரமாக வீதி வசதிகளும் மேம்பட்டுள்ளன. இந்த நிலைமையின் பக்க விளைவாக ஏராளமான வீதி விபத்துக்கள் அன்றாடம் நிகழ்கின்றன. பல மனித மரணங்கள் நிகழ்கின்றன. எனினும் யாரும் கவனிக்காத வகையில் விலங்குகளின் இறப்புகள், விபத்துகள் மேற்படி வாகனங்களால் நிகழ்கின்றன. இதனைக் கண்டும் காணாமல் ஒதுங்கி விடுகிறோம்.

நாம் வீதிகளில் பயணிக்கும்போது எமது சூழலில் பரந்தளவு காணப்படும் ஓணான்கள், அணில்கள் போன்ற சிறிய உயிரினங்கள் வீதியை குறுக்கறுப்பதை காணலாம். சில வேளைகளில் அவை வாகனங்களில் அடிபட்டு இறந்து கிடப்பதையும் கண்டிருப்போம். என்னைப் பொறுத்தவரை எனது மோட்டார் சைக்கிளால் சில தடவை ஓணான்களுக்கு விபத்தை உண்டு பண்ணியிருக்கிறேன். உண்மையில் நான் பலதடவை மேற்படி உயிரினத் தின் மரணத்தை தற்கொலை முயற்சியா கவே கருதி இருந்தேன். உண்மையில் அதுவல்ல காரணம். மனிதர்களாகிய நாங் கள்தான் வீதிகளை அமைத்திருக்கிறோம் விலங்குகள் அந்த வீதிகளை தமக்குரிய வீதிகளாக பார்ப்பதில்லை. காட்டில் அதுவும் ஓர் அங்கம். அவ்வளவுதான். அந்த வீதிகள் காடுகளை, காட்டு விலங்குகளின் பயணப் பாதைகளை துண்டாடுகின்றன. குழப்புகின்றன. இரை தேடுவதற்காகவும், இணை தேடுவதற்காகவும், இரை விலங்குகளிடம் இருந்து தப்பிக்கவும், வெய்யில், மழை, குளிர் போன்ற சீதோஷன் நிலைமைகளில் இருந்து விலகவும் அவை காடுகளுக்குள் இடம்பெயர்கின்றன. அப்படி இடம்பெயரும் போது எமது வீதிகள் குறுக்கிட விபத்துக்கள் நிகழ்கின்றன. எமது வாகனங்களின் ஒலியாலும், வேகத்தாலும் குழப்பமடைந்து



செய்வதறியாது தப்பிக்க சில விலங்குகள் வந்த வழியே திரும்பி விடுகின்றன பல விலங்குகள் சத்தம் வந்த இடத்தை அனுமானிக்க முடியாது வேகமாக வீதியை கடக்க முயல்கின்றன. இதனால் அவை விபத்துக்கு ஆளாகின்றன.

(அடுத்த வாரம் தொடரும்....)




• மின்சாரக் கட்டணத்தில் வரி சேர்க்கப்படாது என அரசு கூறுகின்றது. ஆனால், நாட்டின் மொத்த மின் உற்பத்திக்கு 40 சதவீதம் எரிபொருளே பயன்படுத்தப்படுகின்றது. எனவே டீசல் மீதான VAT வரி விதித்தப்பட்ட பின்னர், மின்சாரம் சரி செய்தல் கட்டணத்திற்கு ஏற்ப மின்சாரக் கட்டணங்களும் நிச்சயமாக அதிகரிக்கும். இதன் தாக்கத்தினை குறைப்பதற்கு 500 மெகாவாட் பேட்டரி ஆற்றல் சேமிப்பு அமைப்புடன் 700 மெகாவாட் (ஆறு) சோலார் பவர் திட்டத்தில் முதலீடு செய்ய ஆஸ்திரேலியாவின் யுனைடெட் சோலார் குழுமத்துடன் மின் கொள்முதல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டது. 1,727 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு நேரடி முதலீட்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி குளத்தின் மேற்பரப்பில் சூரிய மின் சக்தித் திட்டம் நிறுவப்படவுள்ளது.

• மேலும் உலகளாவிய எண்ணெய் விலை வீழ்ச்சியுடன் ஒப்பிடும்போது அடுத்த மாதத்தில் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட அரசு இருப்பதனாலும் இலங்கை மின் சார சபை (CEB) மின் உற்பத்தியில் நீர்மின்சாரத்தை அதிகபட்சமாக பயன்படுத்தியுள்ளதாலும், மின் சார கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.




தற்போதைய மழை வீழ்ச்சி மற்றும் நிலக்கரியின் விலை குறைப்பு என்பவற்றை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அதற்கமைய எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் மின்கட்டண திருத்தத்தில் மின்கட்டண குறைப்பை எதிர்பார்க்கலாம் என இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். மேலும், VAT வரி அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும், மின் கட்டணத்தை குறைப்பதில் நம்பிக்கை இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

• மின்சாரம் சரிசெய்தல் கட்டணத்தை இணைத்து ஒரு சூத்திரத்தின்படி குடிநீர் கட்டணங்கள் வழங்கப்படும் என்றும் நீர் வழங்கல் அமைச்சர் ஏற்கனவே கூறியிருந்தார்.

எனவே, டீசல் விலை 63 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டதன் பின்னர், நீர் கட்டணம் 30 வீதத்தால் அதிகரிக்கப்படும். இதேவேளை, உள்நாட்டு சமையல் எரிவாயுவிற்கும் VAT வரி விதிக்கப்படும். இதன்படி, 12.5 கிலோகிராம் எரி வாயு சிலிண்டரின் விலை 680 ரூபாவுக்கும் அதிகமான விலை உயர்த்தப்படும்.

இவ்வாறாக, 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் பெறுமதி சேர் வரியை அதிகரித்து, மக்களை நரகத்தில் தள்ளும் நிலைக்கு கொண்டுசென்றுள்ளது.

VAT வரி குறைக்கப்படலாம் : ஜனாதிபதி அறிவிப்பு

கடன் மறுசீரமைப்புக்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டால் எதிர்வரும் காலங்களில் VAT வரியைக் குறைக்க முடியும் என ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார். எதிர்பார்த்த வருமானத்தை ஈட்ட முடியாததன் காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இரண்டாம் கட்ட கடன் தொகையை பெற்றுக்கொள்வதில் அரசிற்கு தாமதம் ஏற்பட்டது. அதனால் வரிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சகல நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய 15 சதவீதமாகக் காணப்பட்ட VAT வரி 3 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி அறிவித்துள்ளார். மின்சாரம், இரசாயன உரம், மருந்துகள், ஆயுர்வேத மருந்துகள், குழந்தைகளுக்கான பால்மா போன்ற 43 பொருட்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை.

VAT வரி தொடர்பில் போலியான தகவல்கள் நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் பரப்பப்படுகின்றன. வரவு மற்றும் செலவுக்கு இடையிலான இடைவெளியை குறைக்கும் வகையிலேயே இம்முறை வரவு - செலவு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யாவிட்டால், அரசாங்கத்தை நிர்வகித்துச் செல்ல முடியாது. யார் ஆட்சியைப் பொறுப்பேற்றாலும் இரு வாரங்களுக்கு மேல் அவர்களால் ஆட்சியைக் கொண்டு செல்லவும் முடியாதுபோகும் என்றும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந்தியா, சீனா, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் என்பவை எமக்குக் கடன் சலுகைகளை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன. கடன் மறுசீரமைப்புக்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டால் எதிர்வரும் காலங்களில் VAT வரியைக் குறைக்க முடியும். அதற்கமைய முடிந்தளவு மக்களுக்கான சலுகைகளை வழங்க முடியும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

+94-777-802-900, Email: swaminathan@agsarma.com

# ஒன்லைன் வர்த்தகத்தில் சாதித்த அமேசானின் அடுத்த கட்ட நகர்வு




- அன்ரன் பிரகாஷ் -

எழுத்தாளர்கள் புத்தகங்களை எழுதுகிறார்கள். பதிப்பாளர்கள் அவற்றைப் பிரசுரிக்கிறார்கள். பிரசுரமாகும் புத்தகங்கள் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்படுகின்றன. வாசகர்கள் அவற்றை வாங்குகிறார்கள்.

இந்தப் பந்தியில் இருக்கும் கடைசி வாக்கியத்தில் நிலவிய சிக்கல்களைத் தீர்க்க உருவானது அமேசான். 1994-ல் தொடங்கப்பட்ட அமேசான்.காம் தளத்தில் புத்தகங்கள் மட்டுமே இருந்தன. “வந்த ஓடர்களுக்கான புத்தகங்களைப் பெட்டிகளில் அடைத்து நானும் என் மனைவியும் தபால் நிலையம் சென்று அனுப்புவோம்” எனச் சமீபத்திய பேட்டியில் சொன்னார் ஜெஃப் பெசோஸ்.

ஒன்லைனில் விற்று லாபம் பார்க்கும் சூட்சுமத்தைப் புரிந்து கொண்டு, மற்ற பொருள்களை விற்பதற்குத் தகுந்த வகையில் தனது கடையை விசாலமாக்கியது அமேசான்.

செங்கல்லும் சிமெண்ட்டும் சேர்த்துக் கட்டப்பட்ட Brick and mortar ரீ-டெயில் வணிகக் கடையை விசாலமாக்க வேண்டுமென்றால், பொருள்களை வாங்குவதற்காக அதிக முதலீடு, பெரிய கடைக்கான கூடுதல் வாடகை, மேம்படுத்தப்பட்ட மின்சார இணைப்பு, புதிய பொருள்களைக் காட்சிமயமாக்கும் வசதி, திருடு போகாமல் பாதுகாக்கத் தேவையான செக்யூரிட்டி என தாமதிக்க வேண்டும்.

ஒன்லைன் வணிகத்தை விரிவாக்குவதற்கு, அதை இயக்கும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும். மொத்த விற்பனையாளர்களிடமிருந்து பொருள்களைக் கொள்முதல் செய்வதில் இருந்து, அவற்றைப் பாதுகாத்து வைத்து விநியோகிப்பது முதலான செயல்பாடுகளை முடிந்தவரைக்கும் தானியங்கி முறைமைக்குக் கொண்டு வர வேண்டும்.

இவை அனைத்தையும் கச்சிதமாகச் செய்தது அமேசான். தொடங்கிய பத்து வருடங்களில் முதலீட்டாளர்கள், வாடிக்கையாளர்கள் என அனைவரின் ஆதரவையும் பெற்று கிடுகிடுவென வளர்ச்சி கண்டாலும், மதிக்கப்படும் நிகர லாபம் என்பதைப் பெறமுடியாமல் திணறியபடியே இருந்தது. வளர்ச்சிக்கான ஆராய்ச்சி மற்றும் டெக் கட்டமைப்பை மேம்படுத்த அவர்கள் செய்ய வேண்டியிருந்த செலவு, அவர்களுக்கு வந்த வருமானத்தைவிட அதிகம் என்பது இதற்கு முக்கிய காரணம்.

இதுவரை பெற்ற அனுபவத்தால் கிடைத்த பெரும் நன்மை - ஒன்லைன் வணிகத்தைத் தொடங்க, வளர்க்க, விரிவாக்கத் தேவைப்படும் தொழில்நுட்பக் கட்டமைப்பு பற்றிய தெளிவான புளூபிரின்ட்டை அமேசானால் உருவாக்க முடிந்தது. மொத்த விற்பனையாளர்களிடம் பொருள்களை வாங்கி நுகர்வோரிடம் விற்கும் மாடலை விரிவாக்க அதிக முதலீடு தேவைப்படும். இதைத் தெரிந்துகொண்ட அமேசான், தனது உட்கட்டமைப்பை மற்ற விற்பனையாளர்கள் பயன்படுத்தும்விதமாக, அமேசான் தளம் என்பதை சந்தைகளின் சந்தை என்று மாற்றியது. A-யில் இருந்து Z வரை இருக்கும்படியான அம்பு ஒன்றைக் கொண்டதாக தன் லோகோவை மாற்றியது அமேசான். அ-வில் இருந்து ஃ வரை எது வேண்டுமானாலும் தங்களிடம் கிடைக்கும் என்பதைக் குறிப்பில் உணர்த்தும் முயற்சி அது.

புத்தகங்களைத் தபாலில் அனுப்புவதால் ஆகும் செலவுகளைக் குறைத்து அவர்கள் எளிதாகப் படிக்கும் வகையில் ஈ-பேப்பர் என்ற தொழில்நுட்பம் கொண்ட கிண்டில் படிப்பான்களை அறிமுகம் செய்தது. ஆர்வக்குறைவில் வெளியிட்ட ஃபயர் போன் போன்ற சாதனங்களை மக்கள் விரும்பவில்லை எனத் தெரிந்ததும் இழுத்து மூடவும் அமேசான் தயங்கியதில்லை. இப்படி தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை சரியாகச் செய்தாலும், நிகர லாபம் என்பதை அடைய முடியாத நிலை தொடர்ந்தது.

2006-ல் அமேசான் எடுத்த ஒரு முடிவு, அதனை ஒன்லைன் விற்பனை நிறுவனம் என்ற நிலையிலிருந்து, உலக ரெக் நிறுவனங்களில் ஒன்றாக மாற்றியது. அமேசான் இணைய சேவை (Amazon Web Services, சுருக்கமாக, AWS) என்ற வணிகப்பிரிவைத் தொடங்கியது அமேசான். தான் இதுவரை கட்டிவைத்த தொழில்நுட்பங்களை வணிகம் என்பதையும் தாண்டி மற்ற நிறுவனங்கள் பயன்படுத்தினால் என்ன என்ற சிந்தனையின் செயலாக்கம்தான் AWS.

உதாரணத்திற்கு, ஒன்லைன் விற்பனைத் தளத்தில் ஒரு பொருளை விற்பனைக்குக் காட்சிப்படுத்த, அதன் படங்கள் பலவற்றை இணைக்க வேண்டும். இந்தப் படங்களைச் சேமித்து வைக்க தனது உட்கட்டமைப்பில் தொழில்நுட்பம் ஒன்றைக் கட்டியிருந்தது அமேசான். படங்களைச் சேமித்து வைக்கப் பயன்பட்ட தொழில்நுட்பத்தை Simple Storage Service, சுருக்கமாக S3 என்ற பெயரில் வெளியிட்டது. தனிநபர்களும் நிறுவனங்களும் S3-யைப் பயன்படுத்தி தங்களது கோப்புகளைச் சேமித்து வைக்க முடியும். இப்படிச் சேமித்து வைத்த கோப்புகள் துரிதமாக தரவிறக்கம்

செய்யப்பட, அவற்றின் பிரதிகளை உலக மெங்கும் அமேசான் டேட்டா சென்டர்களில் சேமிக்கும் தொழில்நுட்பத்தை CloudFront என அமைத்தது. இப்படிப் பல்வேறு சேவை களை AWS என்ற ஒரே குடையின் கீழ் கொண்டுவந்தது.

மென்பொருள் உலகம் அதுவரை லைசென்ஸ் அடிப்படையில் மட்டுமே செயல்பட்டுவந்தது. உதாரணத்திற்கு, ஆப் பிள் அல்லது மைக்ரோசாப்ட் வெளியிடும் மென்பொருள் ஒன்றைப் பயன்படுத்த, அவர்கள் நிர்ணயிக்கும் தொகையைக் கொடுக்க வேண்டும். அதை நீங்கள் குறை வாகப் பயன்படுத்துகிறீர்களா, அதிக மாகப் பயன்படுத்துகிறீர்களா என்பதைப் பற்றி அவை கவலைப்படுவதில்லை. சீட்டைக் கலைத்து அமேசானின் துருப்புச்சீட்டா கவே மாறியது AWS. மின்சாரப் பயனீட்டிற்கு எப்படி நீங்கள் கட்டணம் செலுத்துகிறீர் களோ அதுபோல, பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் கட்டணம் செலுத்தினால் போதும் என மாற்றியது.

AWS வணிகப்பிரிவின் தயவால் அமே சானுக்குப் பண மழை கொட்டுகிறது. அமேசானின் வருடாந்தரக் கணக்குகளைப் பார்த்தால் அது நேரடியாகத் தெரியாது. காரணம், அமேசானின் மொத்த வருமா னத்தில் இருபது சதம் மட்டுமே AWS மூலம் வருகிறது. ஆனால், இந்த வருமானத்தி லிருந்து கிடைக்கும் நிகர லாபத்தின் விகி தம் கடந்த பல வருடங்களாக நூறு சதவிகி தத்திற்கும் அதிகம். இதன் பொருள் – அமே சானின் 80% வருமானம் நஷ்டத்தில் செல்ல, அதை ஈடுகட்டி லாபம் பார்த்துக் கொடுக்கிறது AWS.

தொழில்நுட்ப உலகில் ஆராய்ச்சி வடி வில் இருப்பவற்றையும் சேவை வடிவுக் குள் கொண்டுவந்து நுகர்வோருக்குக் கொடுக்க AWS தாமதமாவதைப் பல வரு டங்களாகப் பார்த்துவருகிறேன். உதார ணத்திற்கு, படம் ஒன்றைப் பதிவேற்றி னால், ஏற்கெனவே சேகரமாக்கி வைத்தி ருக்கும் பில்லியனுக்கும் அதிகமான படங்க ளுடன் ஒப்பிட்டு நீங்கள் பதிவேற்றிய படம் என்ன என்பதைப் பகுப்பாய்வு செய்யும் Image Rekognition என்ற AI சேவையை சில வருடங்களுக்கு முன்னால் வெளி யிட்டது AWS. தானியங்கி கார்களை இயக் கும் இயந்திரக் கற்றல் மாடல்களைப் பயிற்சி செய்ய அவர்களது SageMaker என்ற சேவை பயன்பாட்டில் இருந்தது.

கடந்த சில ஆண்டுகளாக, நவம்பர் இறுதியில் தங்களது தொழில்நுட்பம் சார்ந்த மாநாட்டை AWS நடத்திவருகிறது. Re:Invent என்பது மாநாட்டின் பெயர். லாஸ் வேகாஸ் நகரில் இந்த ஆண்டு கோலாகலமாக நடந்த Re:Invent-இல் கலந்துகொண்டேன். படைப்பூக்க செயற்கை நுண்ணறிவின் (Generative AI) தாக்கம் மாநாட்டின் தொடக் கநாளில் இருந்து தெளிவாகத் தெரிந்தது. சுருக்கமாகச் சொல்வதென்றால் – எங்கும் AI, எதிலும் AI என மாநாடு முழுக்க செயற்கை நுண்ணறிவின் வாசம் தூக்க லாக வீசியது.

OpenAI-யுடன் மைக்ரோசாப்ட் போட்டுக் கொண்ட முதலீட்டு ஒப்பந்தத்தின் உதவி யால் வார்த்தைகளைச் சார்ந்த GPT, படங்க ளைச் சார்ந்த Dall-E தொழில்நுட்பங்களைத் தங்களுக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்கிறது. கூகுள் தான் இதுவரை சேக ரித்து வைத்திருக்கும் இமாலயத் தகவல் களைப் பயிற்சிக்குப் பயன்படுத்தி Bard தொழில்நுட்பத்தை இயக்குகிறது. படைப் பூக்க AI பற்றிப் பெரிதாக ஆப்பிள் இது வரை அலட்டிக்கொண்டதாகத் தெரிய வில்லை.

அமேசான் என்ன செய்யும் என்ற எண் ணம் என் மனதில் அவ்வப்போது எழும். அதற்கெல்லாம் பதிலாக அமைந்தது மாநாட்டில் AWS தலைமைச் செயல் அதிகாரி ஆடம் செலிப்ஸ்கி ஆற்றிய முதல் உரை (Keynote). ChatGPT-க்கு அடுத்து டெக் உலகில் கலக்கிவரும் Claude தொழில் நுட்பத்தின் தயாரிப்பாளரான Anthropic/C நிறுவனத்தில் நான்கு பில்லியன் டொலர் களுக்கு முதலீடு செய்யப்போகிறது என்றார் ஆடம். ‘GPT போன்ற அடித்தள மொடல்க ளுக்குப் (Foundational Model - FM) போட்டி யாக டைட்டான் (Titan) என்ற பெயரில் மாடலை வெளியிடுகிறோம்“ என்றது அவரது அடுத்த அறிவிப்பு.

AWS அறிமுகப்படுத்திய AI சேவைகளில் சிலவற்றையும், அவற்றின் தாக்கம் என்ன வாக இருக்கும் என்பதையும் அலசலாம்:

நிரல்மொழி (Programming language) எழுதுவதை எளிமைப்படுத்தும் வழிமுறை களை டெக் உலகம் நெடுங்காலமாகச் செய்துவருகிறது. IDE என சுருக்கமாக அழைக்கப்படும் Integrated Development Environment எனப்படும் மென்பொருள்கள் இதைச் செய்ய முயல்வதை உங்களுக்குத் தெரிந்த மென்பொறியாளரிடம் கேட்டால் சொல்வார்கள். படைப்பூக்க AI வந்தபின்னர் இதன் வேகம் கூடிவிட்டது. ஒரு வரியை எழுத ஆரம்பித்ததும், அடுத்த வரி என்ன வாக இருக்கவேண்டும் என்பதை எழுதிக் கொடுப்பதில் தொடங்கி, நிரல்மொழியில் தயாரித்ததை இயக்கும்போது வரும் பிழை களைத் (Error messages) திருத்தங்கள் செய்வதுவரை பரிந்துரைத்துவிடுகிறது.

இந்தப் பந்தயத்தில் முந்தியது மைக் ரோசாப்ட். அவர்களது VS Code என்ற IDE மென்பொருளில் Co-Pilot என்ற பெயரில் நிரல்மொழித் துணையாளர் தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தினார்கள். இது OpenAI-யின் ChatGPT-ia வைத்து வடிவ மைக்கப்பட்ட தொழில்நுட்பம்.

நிரல்மொழிக்காரர்கள் தாங்கள் படைப் பதைச் சேமித்து வைத்துக்கொள்ளப் பயன்படுத்தும் தொழில்நுட்பம் – Github. இதைச் சில வருடங்களுக்கு முன்னால் வாங்கிப் போட்டுக்கொண்டது மைக்ரோ சாப்ட். உலகின் நிரல்மொழிக் குவியல் தன்வசம் இருக்க, அதை Co-Pilot தொழில் நுட்பத்திற்குப் பயன்படுத்துகிறது மைக் ரோசாப்ட். இதற்குப் போட்டியாக அமேசான் CodeWhisperer தொழில்நுட்பத்தை அறி முகம் செய்கிறது. Github–க்குப் போட்டி யாக அவர்கள் வைத்திருக்கும் CodeCommit சேவையில் சேகரமாகி இருப்பவற்றைப் பயன்படுத்தி CodeWhisperer-க்குப் பயிற்சி கொடுத்திருக்க வேண்டும் என்பது எனது அனுமானம்.

> “நிரல் மொழிக்காரர்கள் தாங்கள் படைப்பதைச் சேமித்து வைத்துக்கொள்ளப் பயன்படுத்தும் தொழில் நுட்பம் - புவைராடி. இதைச் சில வருடங்களுக்கு முன்னால் வாங்கிப் போட்டுக்கொண்டது மைக்ரோசாப்ட்”

CodeWhisperer வெற்றி பெறுமா அல்லது புஸ்வாணமாகி மறையுமா என்பது சில மாதங்களில் தெரிந்துவிடும். இந்த சேவை பற்றிய ஆழமான விவரங்களுக்கு, https://aws.amazon.com/codewhisperer/ வலைப் பக்கத்தைச் சொடுக்குங்கள். நிரல்மொழி மூலம் தயாரிப்பு, அதைப் பரிசோதிக்கும் முறைமைகளை AI எடுத்துக் கொண்டால் இந்தப் பணிகளெல்லாம் மறைந்து விடுமா என்ற சந்தேகம் மனதில் தோன்றலாம். அதைப் பிறிதொரு வாரம் விரிவாகப் பார்க்கலாம்.

டைட்டான் என்ற தங்களுக்கே சொந்த மான படைப்பூக்க AI மாடலை வடிவமைத்து விட்டாலும், அதைத்தான் பயனீட்டாளர்கள் பயன்படுத்த வேண்டும் என்று கட்டாயப்ப டுத்துவதில்லை. மாறாக, Meta மற்றும் Anthropic எனப் பல நிறுவனங்கள் வடிவ மைத்து வெளியிட்டிருக்கும் மாற்றான் தோட்டத்து மல்லிகைகளான மாடல்களை யும் எளிதாகப் பயன்படுத்தும் வசதியை Bedrock என்ற சேவையின் மூலம் கொண்டு வந்திருக்கிறது அமேசான்.

# முல்லை ஓய்வு நகர்
# Mullai Rest City

## எழுதுமட்டுவாழ் நகரில்
## 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

*இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!*

**உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.**
**மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்**
**அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்**

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்












4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

**தொடர்புகளுக்கு: 0777 43 5557**

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

# தமிழர் பொருண்மியம் வார இதழினை பெற்றுக் கொள்ளக்கூடிய இடங்கள் பற்றிய விவரங்கள்

| | |
|---|---|
| யாழ்முற்றம் | - கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் |
| வி.செல்லத்துரை ஸ்ரோர் | - நல்லூர் தெற்கு, நல்லூர் |
| மஞ்சு களஞ்சியம் | - நாவலர் றோட், யாழ்ப்பாணம் |
| ஹரிகிருஷ்ணா | - கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் |
| சிவானந்தா கபே | - இல - 648, பருத்தித்துறைவீதி, நல்லூர் |
| ஏ.ஆர்.கே. Shop | - பருத்தித்துறை வீதி, மூன்றாம்கட்டை, கல்வியங்காடு |
| நகுலன் | - இல - 85, பருத்தித்துறைவீதி, நல்லூர் |
| இனியா தென்றல் புத்தகக் கடை | - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| நாதன் கபே | - நாவலர் வீதி, நல்லூர் |
| ஆசீர்வணிகம் | - கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் |
| உமா ஸ்ரோர் | - கே.கே.எஸ். வீதி, சிவன்கோவில், யாழ்ப்பாணம் |
| சிறிமகாமாரி | - கே.கே.எஸ். வீதி, இணுவில், யாழ்ப்பாணம் |
| வானம்பாடி | - சுழிபுரம் |
| வெண்பா புத்தகக் கடை | - யாழ். இந்துக் கல்லூரி அருகில் |
| பூபாலசிங்கம் புத்தகக் கடை | - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| Book Lap | - யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் முன்பாக |
| ஜெகன் களஞ்சியம் | - இல - 447, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் |
| சிறி துர்க்கா பல்பொருள் வாணிபம் | - கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பளை |
| சஜீவன் பல்பொருள் வாணிபம் | - பிரதான வீதி, பண்டத்தரிப்பு |
| பிள்ளையார் ஸ்ரோர் | - மட்டுவில் மத்தி, சாவகச்சேரி |
| நியூ கஜானன் | - அல்லாரை வீதி, மீசாலை, சாவகச்சேரி |
| அருள்எம்மா | - இல - 505, பீச்றோட், குருநகர், யாழ்ப்பாணம் |